**தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை - 2023**

-----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (''சபை'') இன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான உள்ளக கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மெய்மையாய்வு அறிக்கை பிரகாரம், ரூபா 720 மில்லியன் பெறுமதியான எட்டு நிலையங்களிலுள்ள நிலையான சொத்துக்களின் உள்ள தன்மையை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. மேலும், பிரதேச ஆதார நிலையங்களில் ரூபா 999 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தெளிவாக இனங்காண முடியவில்லை. மேலும், மீளாய்வாண்டியன் போது அந்த சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்காக ரூபா 33 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இதன்படி, அதிகமான நேரங்கள் அந்த சொத்துக்கள் பல இடங்களிற்கு மாற்றப்பட்டமையால் அவை மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. சில நேரங்களில் அவை பௌதீக ரீதியாக இருந்த போதிலும் மெய்மையாய்வு குழுவால் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. இதன்படி, அவை றேளுனுடீ இல் பயன்படுதப்படுகின்ற சொததாக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயன்படுத்தப்படாத சொத்துக்கள் எதிர்காலத்தில் கைதவிர்ப்பு செய்யப்படுவதுடன் வழங்கப்பட்ட பெறுமானத்தேய்வு நீராக்கப்பட வேண்டும். | முகாமைத்துவம் தவறாக பயன்படுத்திய மற்றும் தவற விடப்பட்டவையை தவிர்ப்பதற்கு சொத்துக்களை முகாமை செய்வதற்கு அவசியமான நடவடிககை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சொத்துக்கள் வகைப்படுத்தல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவு காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்விற்காக முன்னைய ஆண்டு சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப நிறுத்திவைத்த உழைப்புகள் ரூபா 2,584 மில்லியனால் மாற்ற மடைந்திருந்ததுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட முன்னைய ஆண்டுகளின் இலாபம் அந்த நிதிக் கூற்றுக்களின் பயன் பாட்டாளர்களிற்கு சரியான தகவல்கள் வழங்குவதன் மூலம் பொருண்மையாக மாற்றடைந்திருந்தது. | LKAS 8 இன் பிரகாரம், முன்னைய ஆண்டு தவறுகளை திருத்துவதற்கு வேண்டுகை வழமையாக உள்ளது. ரூபா 477 பில்லியன் கொண்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்து அடிப்படை சிக்கல் காரணமாக ஆண்டின் பின்னர் செய்ய வேண்டிய சீராக்கல்கள் செய்யப்படும் எனவே NWSDB சொல்லப்பட்ட வேண்டுகையுடன் இணங்கியிருந்தது. | அந்த சீராக்கல்கள் குறிப்பிடத்தக்களவு நிதிக்கூற்றுக்களிற்கு வித்தியாசமாக செய்யப்பட்டிருந்தமை முன்னைய அண்டு சீராக்கல்களை தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமத்திலுள்ள (LKAS 20) ஏற்பாடுகளிற்கு முரணாக மாதிரிக் கணக்காய்வு செவ்வையில், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் 26 செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 7,004 மில்லியன் கூட்டுத் தொகை மற்றும் ஒரு செயற்திட்டம் தொடர்பில் ரூபா 334 மில்லியன் தொகை வெளிநாட்டு மானியங்கள் முறையே 15 ஆண்டு காலத்திற்கு மேலாக மற்றும் 12 ஆண்டு காலத்திற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது மேலும், செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட ரூபா 42,267 மில்லியன் தொகையான அரசாங்க மானியங்கள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மானியங்கள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக திரட்டப்படாமல் இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் திரட்டப்படாமை மீதான தாக்கம் விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாதிருந்தமையால் கணக்காய்வில் மதிப்பட முடியாதிருந்தது. | காணிகள் உள்ளடங்கலாக பெறுமானத்தேய்வு செய்யப்படடிருக்காத சொத்துக்கள் தொடர்பான மானியங்கள் பலகாலமாக பெறுமானத்தேய்வு செய்யபடாதிருந்தது. வழமையில் கட்டிடங்களின் பயன்பாட்டக் கால் 50 ஆண்டுகளிற்கு மேலதக இருந்தன. உரிய மானியங்கள் அத்தகைய காலப்பகுதி வரை திரண்டிருந்தன. எதிர்காலத்தில் உரிய மானியங்களை ஒன்று திரட்டுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளிற்கமைய பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அந்த மானயங்கள் தொடர்பான குறித்த சொத்துக்களை இனங்காண்பதன் மூலம் மானிய திரட்டல் உள்ளடங்கலாக விரிவான பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான குறிபுரைகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பெறப்பட்ட ரூபா 5,294 மில்லியன் மொத்த மானியங்களில், சகல செயற் திட்டங்களிற்குமான நீர் தொடர்பில் தாமதக் கட்டணங்களாக ஏற்பட்ட ரூபா 1,378 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளின் 4.3 ஆம் பந்தியில் குறிப்பிடுவதற்கு முரணாக அந்த செயற்திட்டத்திற்காக பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மானியங்களிற்கு எதிராக சரிசெய்யப் பட்டிருந்தது. மேலும் LKAS 20 இன் 39 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு முறைப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | தாமதக் கட்டணங்களை செலுத்தவதற்கு திறை சேரியிடமிருந்து பெறப்பட்ட தொகைகள் மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. தாமதக் கொடுப்பனவின் மூலதனமாக்கல் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்கவில்லை. சகல செயற்திட்டங்களிற்காக நீர் தொடர்பிலான இந்த தாமதக் கட்டண பிரச்சனைகளை திருத்துவதற்கு பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மானியங்களிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றக்களில் வேண்டப்பட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) சபையால் இன்னமும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற ரூபா 3.67 பில்லியன் தொகையான 16 வகுதியான முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தை திருத்துவதற்கு மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | LKAS 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நாடு முழுவதும் சிதறிக்கிடந்த பரந்தளவான சொத்துக்கள் உள்ளதனால் NWSDB சொத்து அடிப்படை பெறுமதியிவது நடைமுறை சாத்தியமாற்றதுடன் சொத்துக்களின் நிலைபேறான தொகை NWSDB இற்கு சுட்டிக்காட்டப்பட்டன. ஆகவே, சொத்துக்களின் சிக்கன பயன்பாட்டு காலத்தை மீளமதிப்பிடுவதற்கு அரசாங்க மதிப்பீட்டாளரின் சேவையை பெறவது கடினமாக உள்ளது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மோட்டார் வாகனங்களின் முழு வகுதிகளையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு தீர்மானித்தது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் LKAS 16 இன் வேண்டுகையுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (இ) நிதிக்கருவிகள் மீதான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS 09) 5.5 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களை இனங்காணாமல் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வீத அடிப்படையில் கழிவகற்றல் கடன்பட்டார் மற்றும் ஏனைய கடன்பட்டோரிற்காக கடன் கழிவுக்காக | இது வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் 4.3 சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது அத்துடன் அந்த மீதிகளிற்காக வேண்டப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எனவே, SLFRS 9 இல் எதிர்பார்க்கப்பட்ட சுத்திகரிப்பு கடன் நட்ட முறையில் மீதிகளிற்கு | இலங்கை கணக்கீட்டு நியமம் - 09 உடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 47 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிடத்தக்களவு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. | |
| (ஈ) | ஆண்டு தொடக்கம் மற்றும் இறுதியில் மொத்த முற்கொண்டு வரப்படும் தொகை மற்றும் ஏதாவது திரண்ட திரட்டல்கள் போன்றன உரிய வெளிப்படுத்தல் வேண்டுகைகள் கற்பனை சொத்துக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS 38) இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 27.73 மில்லியன் பெறுமதியான கற்பனைச் சொத்துக்கள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மற்றும் கற்பனை சொத்துக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS 38) இன் 104 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு நிதியாண்டிலும் கற்பனைச் சொத்துக்களை திரட்டும் முறை என்பன செய்யப்பட்டிருக்கவில்லை. | மொத்த கற்பனைச் சொத்துக்கள் மொத்தச் சொத்துக்களில் 0.0029 சதவீதத்தை கொண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு ஆண்டிலும் மீளாய்வு செய்வதற்கு அவசியம் இருக்கவில்லை. மேலும், LKAS 38 இன் 74 ஆம் பந்தியின் பிரகாரம் NWSDB கற்பனைச் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு கிரய முறையை பிரயோகித்துள்ளது. எனவே, ஒன்றுதிரட்டலின் மீளாய்வு செய்கின்ற காலப்பகுதி வேண்டப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம்- 38 உடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதுடன் முக்கியமற்ற தொகைகள் உள்ள போதிலும் நியமம் வேண்டுகை வெளிப்படுத்தல் தவிர்க்கப் பட்டிருக்கவில்லை. |
| (உ) | SLFRS 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், வாடகை கொள்வனவு சொத்தாக வெளிப்படுத்தப்படாமல் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் இறையிலாதன காணிகளின் கீழ் குத்தகை ஆதன காணியாக ரூபா 670 மில்லியன் பெறுமதியான குத்தகையாதன சொத்துக்களாக வெளிப்படுத்தப் பட்டிருந்தது. மேலும், சபையானது குத்தயைான காலத்தின் போது வாடகை கொள்வனவு சொத்து பயன்பாட்டிற்கான பெறுமானத் தேய்வு சாட்டுதல் செய்யப் பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமானத் தேய்வு மீதான தாக்கத்தை கணக்காய்விற்கான சான்று களின்மையால் மதிப்பிட முடியாதிருந்:தது. | எதிர்காலத்தில் வேண்டுகையுமன் சொத்துக்களை பயன்படுத்தும் உரிமையாக குத்தகை உடமை காணியை வெளிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீட்டு நியம வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஊ) | நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட கடன்கள் சபையின் மொத்த பொறுப்புக்களில் 75 சதவீதத்தை பிரதிநிதித்தவப்படுத்திய போதிலும் LKAS 01 இன் ஆகக்குறைந்த வேண்டுகையுடன் இணங்குவதற்கு ஆகக்குறைந்த வேண்டப்பட்ட தகவல்களை மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிலுவையாக இருக்கின்ற பயன் பாட்டாளர்களிற்காக ஏனைய வேண்டப்பட்ட தகவல்கள் | NWS&DB இன் முன்னைய நடைமுறைப் பிரகாரம் கடன் விபரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. ஐய வினாவால் வேண்டப்பட்டவாறு அதிக விபரங்கள் 2024 இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். மேலும், இதன்படி வேண்டப்பட்ட தகவல்கள் வழங்கப்படும். | பயன்பாட்டாளர்களினால் தீர்மானம் எடுத்தலிற்காக நிதிக்கூற்றிற்கு வேண்டப்பட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (எ) | நீர் வழங்கல் செயற் திட்டங்களிற்காக பெறப்பட்ட கடன்கள் சபையின் மொத்த பொறுப்புகளின் 75 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்திய போதிலும் LKAS 01 இன் ஆகக் குறைந்த வேண்டுகையுடன் இணங்கி கடன்கள் தொடர்பாக ஆகக் குறைந்த வேண்டுகை மாத்திரம் வெளிப்படுத்தப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் பயன்பாட்டாளர்கள் புரிந்து கொள்வதற்காக ஏனைய வேண்டப்பட்ட தகவல்கள் வெளிபடுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும், அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 8,717 மில்லியன் துணைநிலைக் கடன் தொகை முறைப்படி வகைப்படுத்தப் பட்டிருக்காததுடன் யாழ்ப்பாணம் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட கடனிற்கு துணைநிலை கடன் உடன்படிக்கை செய்வதற்குப் பதிலாக நேரடிக் கடனாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் கடன் இல. 3348 தொடர்பான அரச கணக்குகளின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 4,274 மில்லியனான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இது அரசாங்கத்தால் பெறப்பட்ட கடனாக உள்ளதுடன் அரச கணக்குகளில் பதியப்பட்டதுடன் அவை வெளிநாட்டு மானியங்களில் கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் NWSDB இல் மானியமாக கணக்கீடு செய்யப்பட்டன. | பயன்பாட்டாளர்களினால் தீர்மானம் எடுத்தலிற்காக நிதிக்கூற்றிற்கு வேண்டப்பட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | LKAS 12 இல் வேண்டப்பட்டவாறு பணிப்பாளர் வேதனங்கள் மற்றும் ஓய்வூதிய பணிக்கொடை போன்றவற்றின் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | 22/23 வரிவிதிப்பு ஆண்டின் வரி அறக்கை பிரகாரம் திரண்ட வரிவிதிப்பு நட்டங்களால் 2022.12.31 மற்றும் 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டுகளிற்காக வரிச் செலவினம் இனங்காணப் பட்டிருக்கவில்லை. இதன்படி, ஒப்பீடு மற்றும் வெளிப்படுத்தல்கள் இறுதிக் கணக்குகளில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களிற்காக வேண்டப்பட்ட வெளிப்படுததல்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | சபையானது உரிய ஆண்டில் மீள் சுழற்சி வேலைகளிலிருந்து இலாபத்தை அனுமதிப்பதற்கு பதிலாக ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபமாக தற்போதைய ஆண்டு வருமான கூற்றிற்கு முன்னைய ஆண்டில் வாடிக்கையாளர் மூலம் வழங்கப்பட்ட மீள் சுழற்சி முற்பணங்கள் ரூபா 2,597 மில்லியன் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. அந்த | ஒவ்வொரு ஒப்பந்த உடன் படிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்ட பல்வேறு ஒப்பந்த நிபந்தனைகள் காரணமாக செயற்திட்ட பூர்த்தியாக்கல் செலவினம் ஏற்பட்ட திகதியிலிருந்து தாமதப்பட முடியும். பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கும் நேரத்தில் இலாபங்கள் இனங்காணப்பட்டன. மீள்சுழற்சி வாடிக்கையாளர்களிற்கு ஆபத்து | பூர்த்தியாக்கல் சான்றிதழை வழங்குவதற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் நடவடிக்க எடுக்க வேண்டியதுடன் செயற்திட்டம் பூர்த்தியாக்கும் நேரத்தில் |

| | | |
|---|---|---|
| மீள்சுழற்சி வேலைகளுடன் சம்பந்தமான செலவினம் உரிய முன்னைய ஆண்டினுடைய வருமான கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டின் இலாபம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மற்றும் வெகுமதிகள் அனுமதிக்கப் பட்டிருந்ததென சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. ஆண்டின் பொது பூர்த்தியாக்கப்பட்டவையாக இனங் காணப்பட்டவை வருமான கூற்றிற்கு மாற்றப்பட்டிருந்தன. | சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஓ) 2019 முதல் 2022 வரை நில்வள உப்புநீர் தடைக்கான நிர்மாணம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளிற்காக இனங்காணலை தீர்மானிப்பதற்கு மாத்தறை மாவட்ட செயலகத்தால் நியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட ரூபா 1,208 மில்லியன் இனங்காணல் பொறுப்புகள் LKAS 37 இன் 86 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சிக்கன நலன் வெளிப்பாய்ச்சல் இலாபத் தன்மையற்றிருந்ததுடன் கணக்குகளில் ஒன்றிணைக்கப் பட்டிருக்காத பிரசேதச செயலகத்தால் நியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைக்கபபட்ட முன்காபீட்டு பொறுப்பை முறையாக அளவீடு செய்ய முடியாதிருந்தது.<br><br>ஏதாவது சட்டச் பிரச்சனைகள் நிலுவையில் இருப்பின் அடையாளம் காணப்படுவதுடன் நிகழத்தக்க பொறுப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டது. | நிதிக்கூற்றுக்களிற்காக வேண்டப்பட்ட வெளிப்படுததல்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் 3.2.1 ஆம் பிரிவுகளின் பிரகரம், மெதுவாக நகரும் இருப்புக்களிற்காக ரூபா 1,106 மில்லியன் தொகையான ஏற்பாடு செய்யப் பட்டிருக்கவில்லை. மேலும், இருப்பு மெய்மையாய்வில் பொருளிருப்பு வகைப்படுத்திலின் தன்மையை இனங்காண்பதற்கு நடைமுறையெதுவும் விருத்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | நகருகின்ற அல்லது நகராத விடயங்களை தீர்மானிப்பதற்கு எடுக்கப்பட்ட பிரமாணங்களில் தங்கியிருத்தல் சொல்ல முடியவில்லை அந்த சகல விடயங்களும் மூன்று ஆண்டு காலமாக தொடர்ச்சியாக நகருபவையாக பதியப்பட்டிருந்தது. எனவே, அந்த நகராத இருப்புக்களிற்காக தேறிய மாற்றக்கூடிய பெறுமதியை மதிப்பிடுவதற்கு வேண்டப் பட்டிருக்கவில்லை. தற்போது NWSDB பழுதடைந்த இருப்புக்களிற்காக ஏற்பாடுகள் செய்திருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொது சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் 3.2.1 ஆம் இலக்கத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் | WAC கணப்பீடு பொருளிருப்பு முகாமைத்துவ முறைமையின் (IMS) ஊடாக மொத்தமாக நாடு முழுவதும் எடுக்கின்ற ஒவ்வொரு | அசாதாரண விலை தளம்பல்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருளிருப்பு பதிவேட்டின் மீதி நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையில் பெறுமதியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், முகாமைத்துவ தகவல் முறைமையிடமிருந்து பெறப்பட்ட பொருளிருப்பு மீதி பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட இருப்புக்களிற்கு இடையிலான அசாதாரண விலைவேறுபாடு காரணமாக நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையுடன் இணங்கியிருக்கவில்லை என்பதுடன் ரூபா 200 மில்லியன் அசாதாரண விலை வேறுபாட்டுத் தொகை மீளாய்வாண்டின் போது இருப்பு சீராக்கலாக இருப்பு பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது என கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது வெளிபடுத்தப்பட்டது. எனவே, நிதிக்கூற்றுக்களில் பொருளிருப்பு மீதிகளின் உண்மைத் தன்மையை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது. | விடயங்களிலும் செய்யப்பட்டிருந்தது. நாடுபூராவும் பேரேட்டிலிருந்தான மொத்த விலை வேறுபாடு மற்றும் இருப்பு மெய்மையாய்வு NWSDB இன் பௌதீக ரீதியாக மெய்மையாயவு செய்யப்பட்ட மொத்த இருப்பு மீதிகளில் ஏறத்தாழ 1 சதவீதத்தை விட குறைவாக இருந்தது என குறிப்பிடப்பட்டது. விலை வேறுபாடு பரிந்துரைக்கப்பட்ட IMS விருத்திகளின் அமுலாக்கலுடன் எதிர்காலத்தில் ஆகக்கூடியளவு குறைக்கப்படும். | |
| (ஆ) | வங்கியிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடும் போது, இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் மூன்று உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற் திட்டங்களின் கடன்கள் மீதான அட்டுறு வட்டிகள் தொடர்பில் போது ரூபா 1,195 மில்லியன் மேலதிக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, நடைபெறும் வேலை மீதிகள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன்களின் மீள் கட்டமைப்பின் பின்னர் இறுதி வட்டிக் கொடுப்பனவு அல்லது மீள் செலுத்தல்கள் தீர்மானிக்கப்படும். ஆகவே, வட்டித் தொகை இதன்படி சீராக்கப்படும். | சிறந்த மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். |
| (இ) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 25,697 மில்லியன் தொகையான அறுபத்து எட்டு (68) பூர்த்தியாக்கப்பட்டு மற்றும் தொடங்கப்பட்ட செயற்திட்டங்களின் கிரயம் மூலதனமாக்கப்படாமல் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மூலதன மாக்கப்படாமல் நடைபெறும் வேலைகளில் இருந்தது. ஆகவே, ஆண்டிற்கான உரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அதே தொகையால் அதிகரித்துக் | மூலதனமாக்கல் சாதாரணமாக பகுதியளவில் மற்றும் வித்தியாசமான மதிப்பாய்வு கட்டங்களில் மற்றும் பூர்த்தியாக்கலிற்கான அனுமதி நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த சொல்லப்பட்டவற்றில் அதிகமானவை இன்னமும் மேற்குறிப்பிட்ட செயற்பாட்டில் உள்ளது. ஏதாவது சொத்துக்கள் பூர்த்தியாக்கப்பட்டு உரிய செயற்திட்டங்களின் கீழ் பயன்படுத்த முடியாத நிலையில் | மூலதனமாக்கல் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.<br><br>ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்படின் கடன்கழிவுக்கான பரிசோதிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது அத்தகைய சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்ட 05 செயற் திட்டங்கள் தொடர்பில் ரூபா 199 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் காரணங்களை இனங்காண்பதற்கு புலனாய்வு செய்யப்படாமலும் இந்த விடயம் முன்னைய ஆண்டிலிருந்து குறித்துரைக்கப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்களை செய்யாமல் பதின்மூன்று ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்தது. கடன்கழிவு தாக்கத்தை இனங்காண்பதற்கு கடன் கழிவு பரீட்சிப்பு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இருப்பின மூலதனமாக்குவதற்கு உரிய கணக்காளர்கள் தெரிவித்திருந்தனர். | |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புக்கள் என்பனவாக முறையே ரூபா 150 மில்லியன் மற்றும் ரூபா 51 மில்லியன் தொகையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்றன. எவ்வாறாயினும், அவற்றினை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 235 மில்லியன் இனங்காண்படாத முந்திய மீதி, ரூபா 22 மில்லியன் இருப்பு மீதி, ரூபா 8 மில்லியன் வங்கி மீதி மற்றும் ரூபா 15 மில்லியன் தொகையான அமைச்சிற்கு வழங்கப்பட்ட முற்பணம் செயற்பாடற்றவையாக மேற் குறிப்பிடப்பட்டவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சாதரதண முறைமை கணனி மயப்படுத்தப்படுகின்றமையால் அந்த மீதிகள் 1999 ஆம் ஆண்டிலிருந்து சுழல்கின்றன. மேற்குறிப்பிட்டவற்றினை தெளிவாக்குவத்கு விவேட குழுக்களை உருவாக்கல் நிபுணத்துவ கணக்காய்வு நிறுவனங்களில் சேவை பெறல் கோன்ற பல்வேறு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தது. அந்த மீதிகள் ஆதாரமான ஆவணங்கள் கிடைக்காமையால் தெளிவாக்கப் பட்டிருக்கவில்லை. ரூபா 149 மில்லியன் பொறுப்புகள் தேவையான அனுமதிகள் பெறுவதற்காக I&E இற்கு மாற்றப்படும். அந்த மீதிகளை தெளிவாக்குவதற்கான நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் தெளிவாக்கப்படும். | இருக்கின்ற மீதிகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் எதிகாலத்தில் தெளிவாக்காத மீதகள் எழுவதை தடுப்பதற்கு தேவையான முறைமைகள் அறிமுகப்படுத்த வேண்டும். |
| (உ) | கிரய நிலையங்களில் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டிருந்த நான்கு காணிகள் மற்றும் இரண்டு வாகனங்கள் அந்த சொத்துக்களின் பெறுமதியை மதிப்பாய்வு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் மேல்-தெற்கு பிராந்தியத்திற்கு | நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப் பட்டிருந்ததுடன் இதன்படி சாத்தியமானளவு விரைவாக மெய்மையாய்வு அறிக்கையை பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய தொகைகளில் தவறுகளை தருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான மூன்று காணிகள் நிலையான சொத்துப் பதிவேட்டில் கணக்கீடு செய்யப்பட்டோ அல்லது உள்ளடக்கப்பட்டோ இருக்கவில்லை. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புதய இணைப்பு கடன்பட்டோர் உள்ளடங்கலாக வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 14,905 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், கடன் தள்ளுபடிக்கான ஏற்பாடுகள் ரூபா 14,324 மில்லியன் தொகயான கடன்பட்டோருக்கு மாத்திரம் செய்யப்பட்டிருந்தது. எனவே, ரூபா 581 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோருக்காக ஏறபாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன் தள்ளுபடி கணிப்பீடு வர்த்தக முறைமையால் வழங்கப்பட்ட உள்ளபடியான தொகைகளின் அடிப்படையில் இருந்தது. அதேநேரம் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதி நிதிக்கூற்றுக்களிற்காக குறிப்பு 20 இல் வெளிப்படுத்தப்பட்டிருந்த மதிப்படப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் உள்ளது. இரண்டு முறைமைகளும் (வர்த்தக முறைமைகள் மற்றும் பொதுப் பேரேடு) இரண்டு வேறுபட்ட நோக்கங்களை அடைவதற்கு கட்டமைக்கப்பட்டன. எனவே, இரண்டு முறைமைகளிறகும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. | பேரேட்டிலுள்ள சகல கடன்பட்டோர் மீதிகளும் கடன்கழிவு ஏற்பாடுகள் செய்யும் போது கணக்கிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | மூன்று ஆண்டுகளிற்கு முன்னர் பல்வேறு செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட ரூபா 387 மில்லியன் தொகையான ஆலோசனைக் கட்டணம் செலுத்த வேண்டிய ஆலோசனைக் கட்டணமாக பதியப்பட்டிருந்ததுடன் இதனை தீர்ப்பனவு செய்யப் பட்டிருக்காததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானமாக பதியப்பட்டிருந்தது. | இந்த தொவைக்காக தகுதியுடைய நபர்கள் வழங்கப்பட்ட ஆலோசனை சேவையின் சிக்கலான தன்மையால் இனங்காண்பதற்கு கடினமாக உள்ளது. இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள இணக்கக்கூற்று இந்த மீதியை பொறுப்பாக இனங்கண்டிருந்தது. செயற்பாட்டிலுள்ள பேரம்பேசல்கள் இறுதியாக்கப்பட்ட பின்னர் இந்த கணக்கு 2024 இல் தெளிவாக்கப்படும். | உடனடியாக மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஏ) | சபையானது 2021 ஆம் ஆண்டில் நிபுணர்களால் செய்யப்பட்ட ஊகங்களில் அடிப்படையிலான பணிக்கொடை ஏற்பாடு நடைமுயையாண்டிலும் தொடர்ந்திருந்ததுடன் மக்கள் தொகை மற்றும் உத்தியோகத்தர் சுழற்சி, ஓய்வுபெறல் வயது, கழிவு வீதம் போன்றன நிதி ஊகங்களிலுள்ள குறிப்பிடத் தக்களவு மாற்றங்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவதானிக்கப்பட்டது. ஆகவே, பணிக்கொடை ஏற்பாடு உள்ளபடிான பெறுமதியுடன் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி | கடந்த நடைமுறை பிரகாரம் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளிலும் NWS&DB சம்பள மீளாய்வுகள் பட்டியலிடப்பட்டன. ஒவ்வொரு மூன்று ஆண்டுகளிலும் பணிக் கொடைக்கான ஏற்பாடுகள் பாரியளவு தாக்கம் மாற்றுகின்றன. NWS&DB ஒவ்வொரு கூன்று ஆண்டுகளிலும் நிபுணத்துவ மதிப்பாய்வுகளை நடாத்துகின்றன புதிய நிபுணத்துவ மதிப்பாய்வு 2024 இல் மேற்கொள்ளப்படுவதுடன் மக்கள் தொகை மற்றும் உத்தியோகத்தர் சுழற்சி, ஓய்வுபெறல் வயது, கழிவு வீதம் மற்றும் சம்பளங்கள் போன்றன நிதி | ஊகங்களிலுள்ள குறிப்பிடத்தக்களவு மாற்றங்களிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடத்தக்களவு வித்தியாசத்தை கொண்டிருக்குமென அவதானிக்கப்பட்டது | ஊகங்களிலுள்ள குறிப்பிடத் தக்களவு மாற்றங்களின் சகல தாக்கங்களும் கணக்கிற்கு எடுக்கப்படும். | |
| (ஓ) | செயற்பாட்டுச் சொத்துக்களின் ரூபா 6,130 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு மற்றும் அந்த சொத்துக்களிற்கான உரிய திரட்டல் விற்பனைக் கிரயமாக கருதுவதற்கு பதிலாக நிர்வாக செலவினமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. | உத்தேசிக்கப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ முறைமை (AMS) அபிவிருத்திகளுடன் விற்பனை கிரயங்களை ஒப்பிடும்போது பிரதான செயற்றாட்டு சொத்துகளுடன் தொடர்புபட்ட பெறுமானத்தேய்வை அனுமதிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்து. | செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட நேரடிச் செலவினம் செயற்பாட்டு இலாப கணிப்பீட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | VAT அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீட்டர் விற்பனைகளின் பெறுமதி, மொத்த விற்பனை மற்றும் பவுசர் வழங்கல்கள் என்பவற்றிற்கு இடையில் ரூபா 1,456 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சில வருமான வகுதிகள் எற்கனவே நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டது ஆனால் VAT அறிக்கைக்காக உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அந்நேரத்திலான வித்தியாசங்கள் அந்த வித்தியாசங்களை பாதித்திருந்தன. | வித்தியாசங்களிற்கான காரணங்கை இனங்காண்பதற்கு நிதிக்கூற்று, வர்த்தக முறைமை மற்றும் VAT அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட வருமானம் என்பவற்றிலுள்ள மீதிகளின் இணக்கம் மற்றும் விற்பனை தொகைகளின் உண்மைத் தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு கணக்காய்வாளருக்கு சகல விபரங்களும் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதி மற்றும் உரிய வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக் கூற்றுக்களின் மீதியுடன் ஒப்பிடும் போது நான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் வெளிநாட்டு மானியங்களில் ரூபா 20,667 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசம் முக்கியமாக மானியங்களை திரட்டல் காரணமாக உருவாக்கப்பட்டது. NWSDB ஆனது மானிய திரட்டலின் பின்னர் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்றது. ஆனால் செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் மானிய திரட்டலை திரும்ப சேர்த்தல் மூலம் தயாரிக்கின்றது. | ஏதாவது வித்தியாசங்கள் இருப்பின் இணக்கம் செய்வதற்கும் சீராக்கல்களை செய்வதற்கும் வேண்டப்பட்டது. |
| (இ) | சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதிகளிற்கும் உரிய ஏழு | ஆணைமடுச் செயற்திட்டம் தொடர்பில் WIP இல் பதியப்பட்டிருக்காத | ஏதாவது வித்தியாசங்கள் இருப்பின் இணக்கம் செய்வதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களின் நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 17,333 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | காணிகளிற்கான முற்பணக் கொடுப்பனவின் விளைவால் வித்தியாசம் இருக்கின்றது. ஆனால், செயற்திட்டக் கணக்கில் முற்பணக் கணக்கில் (BZ/247) பதியப்பட்டிருந்தது. | சீராக்கல்களை செய்வதற்கும் வேண்டப்பட்டது. |
| (ஈ) | சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் மூலதன பங்களிப்பு தொடர்பில் பொது திறைசேரியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 10,770 மில்லியனான வித்தியாசம் இனங்காணப்பட்டது. | இணக்க கூற்று தயாரிக்கப் பட்டிருந்ததுடன் இனங் காணப்பட்ட வித்தியாசங்கள் 2024 இல் தெளிவாக்கப்படும். | வித்தியாசங்கள் மற்றும் சீராக்க பதிவேடுகளை இதன்படி இணக்கம் செய்ய வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 323,782 தொகையான இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் தெளிவாக்கப்படாமல் ஆறு மாதங்களிற்கு மேலாக இடைப் போக்கிலுள்ள காசில் இருந்தது. | இடைப் போக்கிலுள்ள காசு வங்கிகள், பிராந்தியம் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு இடையில் வித்தியாசங்கள் துண்டிக்கப்பட்டமையால் எழுந்தது. இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதன்படி தெளிவாக்கப்படும். | வித்தியாசங்கள் மற்றும் சீராக்க பதிவேடுகளை இதன்படி இணக்கம் செய்ய வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆவணரீதியான சான்றுகள்

| | **விடயம்** | **பெறுமதி ரூபா மில்லியன்** | **கிடைக்கப்பெற்றிராத சான்றுகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|---|
| (அ) | ஏனைய கடன்பட்டோர் | 79 | தலைமை அலுவலகத்தில் ஏனைய கடன்பட்டோருக்காக வாடிக்கையாளர் வாரியான விரிவான பட்டியல், வாடிக்கையாளர் சொத்து முகாமைத்துவம், பிராந்திய ஆதார நிலையங்கள்- கொழும்பு- வடக்கு, முகாமையாளர் அலுவலகம்- திருகொணமலை மற்றும் தெகிவளை | ஏற்கனவே காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டது. | கணக்காய்விற்கு விரிவான பட்டியல் (i-xiii) சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. ஏனைய கடன்பட்டோர், குறுகிய கால வைப்புகள், பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கும் நோக்கிலான பிடித்துவைத்தல் வரி என்பவற்றிற்கு விரிவான பட்டியலை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நகராத மற்றும் மெதுவாக நகராத இருப்புகள் | 1,655 | காலப்பகுப்பாய்வு | ஏற்கனவே காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டது. |
| (இ) | ஏனைய நிறுவனங்களில் உள்ள குறுகிய கால வைப்புகள் | 5 | விரிவான பட்டியல்கள் மற்றும் உள்ள தன்மைக்கான காரணங்கள் | ஏற்கனவே காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டது. |
| (ஈ) | பிடித்துவைத்தல் வரி | 112 | விரிவான பட்டியல்கள் மற்றும் சான்றிதழ்கள் | பல வேண்டுகைகள் செய்யப்பட்ட போதிலும் IRD மீளளப்பு கோரிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை. சான்றிதழ்கள் அல்லது சமர்ப்பித்த பட்டியலின் பிரதிகள் இந்த ஆண்டில் அரசாங்க கணக்காய்வாளருக்கு வழங்குவதற்கு உள்ளன. |
| (உ) | புனரமைப்பு வரி | 2 | விரிவான வரிக் கணிப்பீடு, பட்டியல் | இது பொறுப்பு கணக்காக உள்ளதுடன் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மீதி 1999 இலிருந்து முற்கொண்டு வரப்பட்டது. இது செயற்பாடற்ற மீதிகளில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த மீதிகளை தெளிவாக்குவதற்கான நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் தெளிவாக்கப்படும். |
| (ஊ) | திறைசேரி மானியங்கள் | 137 | சம்பந்தமான செயற்திட்ட விபரங்களுடன் மானியங்களின் விரிவான பட்டியல்கள் | விரிவான பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | மூலதன மானியங்கள்- உள்ளூராட்சி அதிகாரசபை | 544 | சம்பந்தமான செயற்திட்ட விபரங்களுடன் மானியங்களின் விரிவான பட்டியல்கள் | விரிவான பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது. |
| (ஏ) | வெளிநாட்டு மானியங்கள் | 7,232 | சம்பந்தமான செயற்திட்ட விபரங்களுடன் மானியங்களின் விரிவான பட்டியல்கள் | விரிவான பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது. |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள்**

**1.6.1. பெறவேண்டியவைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,344.78 மில்லியன் கூட்டு தொகையான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர், துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. மேற்குறித்த வியாபார கடன்பட்டோரில் மேல் மத்தி, தொற்கு, மேல் வடக்கு மற்றும் மேல் தெற்கு பிராந்தியங்களில் 66 சதவீதத்தை பிரதிநதித்துவப் படுத்துகின்றது. புதிய இணைப்பு கடன்பட்டோர் மூன்று மாதங்களிற்குள் 3 தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 32.5 மில்லியன் தொகை 3 ஆண்டுகளிற்கு மேல் அறவிடப்படாமல் இருந்தது. | நிலுவையாக இருக்கின்ற நிலுவைகள் படிப்டியாக வளர்ந்தள்ளன. தற்போது நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவையாக இருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாராளுமன்ற உறுப்பினர்களுடைய அரசாங்க விடுதிகளிற்கு வழங்கப்பட்ட 23 நீர் இணைப்புகள் தொடர்பில் ரூபா 3.5 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதியில் நீண்ட காலம் அறவிடப்படாது இருந்தது. | இறந்து போன அரச பிரதிநிதிகளிடமிருந்து பெற வேண்டிய நிலுவைகளை அறவிடுவது சாத்தியமற்றதென பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் அறிவித்திருந்தார். அரச பிரதிநிதிகளின் தனப்பட்ட விடுதிகளிலிருந்து நிலுவைகளின் அறவீடு சாதாரண வாடிக்கையாளராக கருதி நிலுவைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி, நிலுவைகளை செலுத்தப்பட்டிருக்காத இடங்களில் நீர் வழங்கலை துண்டிப்பதற்கு வர்த்தக உத்தியோகத்தர்களிற்கு | உரிய தரப்பினரிடம் பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு போதிய மற்றும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. | |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் ரூபா 1,886.73 மில்லியனாகும். அதில், 69 சதவீதத்திற்கு சமமாகவிருந்த ரூபா 1,293.21 மில்லியன் தொகை அறவிடப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. | நிலுவையாகவிருக்கின்ற நிலுவைகளை அறவிடுவதற்கு ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. 2464 வழக்குகள் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டது 1972 வழக்குகள் 2023 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டன. அறவீடுகள் மீதான RSC களில் பயிந்சி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. அறவீட்டு நடைமுறை செயற்பாட்டில் உள்ளன. | அறவீட்டு நடைமுறையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| ஈ) | 20 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டியிருந்த காலி நகர சபையின் இரண்டு சட்ட விரோத இணைப்புகள் தொடர்பில் ரூபா 1.76 மில்லியன் மற்றும் 6 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டியிருந்த கொழும்பு மாநகர சபையின் இரண்டு சட்ட விரோத இணைப்புகள் தொடர்பில் ரூபா 28 மில்லியன் நிலுவையாகவிருக்கின்ற மீதி மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எழுத்துமூல அறிவித்தல் வழங்கிய பின்னர் கால் மாநகர சபை உறுப்பினர்களின் கணக்குகளிலிருந்து நிலுவைகள் சேகரிக்கப்பட்டிருந்தது. பல கூட்டங்கள் நடைபெற்றதுடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், முகாமைத்துவ மட்டங்களால் தீர்மானங்கள் எடுக்க வேண்டியிருந்தது. | சட்டவிரோத நீர் இணைப்புகள் காரணமாக ஏற்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| உ) | கடன்பட்டோருக்கு அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தல்களை பகுப்பாயும் போது, ரூபா 347 மில்லியன் கூட்டுத் தொகையுடைய 160 கணக்குகளில் ரூபா 58 மில்லியன் பெறுமதியுடைய 36 கணக்குகள் மாத்திரம் 2023 ஏப்ரல் 30 இல் உறுதிப்படுத்தியிருந்தனர். ரூபா 2 மில்லியன் பெறுமதியுடைய ஒரு கணக்கு அமைவிடத்தை கண்டுபிடிக்க முடியாமையால் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் ரூபா 288 மில்லியன் பெறுமதியுடைய 123 கணக்குகள் அல்லது 76.87 சதவீதமானவை பதிலளித்திருக்கவில்லை. ஆகவே, பெரும்பாண்மையான கடன்பட்டோரின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | முறைமையிலுள்ள முகவரிகள் பயன்படுத்தப்பட்டது. அதே முகவரிகள் நீர் பட்டியல் வழங்குவதற்கும் வாடிக்கையாளருடன் ஏனைய அலுவலக தொடர்புகளிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. | செயற்பாட்டு காலத்தின் போது வாடிக்கையாளரின் உண்மையான முகவரியை மெய்மையாய்வு செய்ய வேண்டியதுடன் அவதானிக்கப்பட்ட வித்தியாசங்களைவ வகைப்படுத்தி காரணங்களை கண்டுபிடிக்க வேண்டும். |
| (ஊ) | வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 60 மில்லியன் கூட்டுத் தொகையான மீளளிக்க வெண்டிய குறுகியகால வைப்புகள் | அந்த தொகைகளில் சில 2017 பெப்ரவரியில் மீளளிக்க வேண்டிய வைப்புகளாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு | இருக்கின்ற வைப்பக்கள் மற்றும் முற்பணங்களை மீளாய்வு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மூன்று அண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்தது. | செலுத்தப்பட்டிருந்தது. இந்த வைப்புக்களை அறவீடு செய்யும் நோக்கில் RDA 2022 ஆம் ஆண்டில் அறிவித்திருந்தது. ஆனால், தீர்ப்பனவு தாதமாக செய்யப்பட்டிருந்தது. ஆகவே, எதிர்காலத்தில் இந்த RDA இன் கொடுப்பனவுகள் அறவீடு செய்வதற்கு ஒழுங்குகள் எசெய்யப்படும். | எடுக்கப்பட வேண்டியதுடன் அறவீட்டு நடைமுறையை நிறை வேற்றப்பட வேண்டும். |

**1.6.2 முற்பணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உரிய காணிகள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதேச ஆதார நிலையத்தால் (மத்திய) பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 47 மில்லியன் தொகை காணி முற்பணத்தை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே, சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 42 மில்லியன் தொகை பேரேட்டு பதிவு 246 இன் கீழ் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முற்பணமாக பதியப்பட்டிருந்ததுடன் 09 ஆண்டுகளிற்கு மேலாக தெளிவாக்கப்படாமல் இருக்கின்றது. | சொத்துக்கள் படிவத்தை கண்டுபிப்பதற்கும் மூலதனாக்கல் கட்டத்தில் தவறுகளை திருத்தவதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முற்பணக் கொடுப்பனவு காலரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னாள் செயற்பாடற்ற ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 17 மில்லியன் தொகையான கடன்கள் மற்றும் முற்பணங்ள் 2023 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்காமல் எட்டு ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு தெரிவு செவ்வையின் பிரகாரம், கடன்கள் மற்றும் முற்பணங்கள் பெற்றிருந்த மேற்குறித்த ஊழியர்களின் 90 சதவீதத்திற்கும் அதிகமானவரகள் 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய 12/2011 ஆம் இலக்க சபை சுற்றறிக்கையின் 03.5 ஆம் பந்தயின் பிரகாரம் பெறவேண்டிய தொகைகளை அறவிடாமல் ஓய்வில் சென்றிருந்தனர். | குறிப்பிடப்பட்ட நடைமுறையின் பிரகாரம் ஓய்வுபெற்று சென்றவர்களிடமிருந்து பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நிதித்திணைக்களம் அறிவித்திரந்தது. | அந்த மீதிகளை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அறவீடு செய்ய இயலாதிருப்பின் பெறவெண்டியவைகளை அறவிடாமல் ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 வெளிப்படுத்தப்பட்டிருக்காத தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 4.02 மில்லியன் பணிப்பாளருடைய வேதனங்கள் மற்றும் ரூபா 6.25 மில்லியன் தொகையான ஓய்வூதிய பணிக்கொடை போன் தொடர்புபட்ட தரப்பினர் தொடர்பான வெளிப்படுத்தல்கள் LKAS 24 .இன் வேண்டுகை பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | வாடிக்கையாளர் மற்றும் வழங்குநர் -- காரணமாக NWS&DB ஆனது தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் அதன் செயற்பாடுகளின் தனிப்பட்ட – மற்றும் ஏதாவது தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களிற்குள் நுழைகையில் -- குழறுபடியாக இருந்தது. மேற்குறித்த வேண்டுகைகளில் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களிற்காக வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளது. NWS&DB கூட்டாக இருந்த தொடர்புபட்ட தரப்பினருடனான சாத்தியமானளவு கொடுக்கல் வாங்கல்களை கொண்டிருந்ததுடன் தனிப்பட்ட ரீதியாக முக்கியமற்ற மற்றும் அதன் செயற்பாஷடகளில் சாதாரணமான சந்தர்ப்பங்களில் ஏதாவது தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களை செய்கின்றன. மேற்ஷகுறிப்பிட்ட அடிப்படையில் தொடர்புபட்ட தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களிற்கான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியம வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள, விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்களின் 571 ஆம் பிரிவு | ரூபா 219 மில்லியன் தொகையான மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்புகள் உரிய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டோ அல்லது வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டோ இருக்காமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. | மீளளிக்கு வேண்டிய வைப்புகளை விடுவிப்பதற்கு நிபந்தனைகளின் பூர்த்தியாக்கலின் அடிப்படையில் இது இதன்படி செய்யப்படும். | காலாண்டு ரீதியில் வைப்பு மீதிகளை மீளாய்வு செய்வதற்கும் சரியான நேரத்தில் தீர்ப்பனவு செய்யப்படவும் வேண்டும். |
| (ஆ) 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகளின் திணைக்களத்தின் அரச | இந்த ஏற்பாட்டிற்கு முரணாக, திரண்ட நிதியத்திற்கு இலாபம் பகிரப்படாமல் சபையின் அனுமதியின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான | உற்பத்தி மட்டங்களின் அதிகரிப்பு பிரகாரம் உற்பத்தி ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டது. இது உற்பத்தி நியமம், | செயற்பாட்டு கைநூலின் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 5.1 | மிகையூதியத்திற்கு பதிலாக உற்பத்தி ஊக்குவிப்பாக ரூபா 287.85 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேல், மீளாய்வாண்டின் போது சம்பளங்களுடன் மாதாந்த உற்பத்திப் படியாக ஊழியர்களிற்கு ரூபா 471.39 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வருமானம், சேகரிப்பு சேறு போன்றன உள்ளடக்கிய சூத்திரத்தின் பிரகாரம் கணப்பீடு செய்யப்பட்டது. உழைக்கப்பட்ட இலாபம் மற்றும் வழங்கப்பட்ட அரசாங்க சுற்றறிக்கை என்பவற்றின் படி மிகையூதியம் செலுத்தப்பட்டது. இதன்படி மிகையூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | |
| (இ) | 2021 நவம்பர் 16 இன் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் 2.1 ஆம் பந்தி | சபை பணிப்பாளர்களை அறிமுகப் படுத்துவதற்கும் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு நோக்கங்கள் போதிய கனவத்துடன் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கட்டுப்பாடுகளை பேணுவதற்கு வேண்டப்பட்ட போதிலும் சபை பணிப்பாளர்களிற்கு அறிவிக்காமல் பொது முகாமையாளரால் சபையின் தலைவருக்கு கூட்டு தொடர்புக் கிளையை கையளித்திருந்தார். | 2023.05.09 ஆந் திகதிய P 28/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை அடிப்படையில் கூட்டுத் தகவல் பிரிவு வெளிநாடு செல்வதற்கான அதகாரம் சபை தலைவருக்கு வழங்கப்பட்டது. | பணிப்பாளர் சபை அதிகாரத்தை வழங்கிருக்கவில்லை. ஆகவே, வழிகாட்டல் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஈ) | 2006 செப்தெம்பர் 22 ஆந்திகதி 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டு கைநூலின் 3.2(i) ஆம் பிரிவு மற்றும் DMS பணிப்பாளர் நாயகத்தின் 2011 மே 23 ஆந் திகதிய DMS/E2/19/4/064 ஆம் இலக்க கடிதம் | சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக 2024 மார்ச் இறுதிவரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | நியம படிவம் தயாரிப்பதற்கு அறிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட SOR சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், பரிந்துரைக்கப்பட்ட SOR செயற்பாட்டில் உள்ளதுடன் தொழிற்சங்கத்துடன் கலந்துரையாடல் இறுதியாக்குவதற்கு உள்ளது. இதன்படி SOR ஆனது MSD இற்கு எதிராக சமர்ப்பிக்கப்படும். | சாத்தியமானளவு விரைவில் SOR இற்கான அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் 2012 சனவரி 11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம். | சபையானது ஊழியர்களுடன் சேகரிப்பு உடன்படிக்கைக்குள் நுழையாமல் 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அமைச்சரவை அனுமதியுடன் மாத்திரம் ஊழியர்களிற்காக வேதனங்கள் மற்றும் மிகையூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | கவனத்திற்கொள்ளப்பட்ட து | சுற்றறிக்கை வேண்டுகையை பின்பற்ற வேண்டும். |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பொது முகாமையாளருக்காக ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு 2023 ஏப்ரல் 12 இல் விபத்து நிகழ்ந்திருந்த போதிலும் சபையானது 2023 திசெம்பர் 31 இல் பொது திறைசேரியில் அரச நிதி திணைக்கள பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு அந்த வாகன விபத்து மீது ரூபா 13 மில்லியன் மதிப்பிடப்பட்ட நட்டம் அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. | உள்ளபடியான நட்டம் இன்னமும் கணிப்பீடு செய்யப்பட்டிருக்காததுட ன் இது தெளிவாக இனங்காணப்பட்ட பின்னர் உரிய சாரதியிடமிருந்து விளக்கம் கோரப்படும். | முகாமைத்துவம் அறவிடப்படாத நட்டங்களிற்காக பொறுப்பேற்க வேண்டியதுடன் நட்டத்தை மதிப்பிடுவதற்கு ஒரு ஆண்டிற்கு மேலாக எடுக்கின்றதுடன் தகுதியுடைய காலப்பகுதிக்குள் காப்புறுதி நிறுவனத்திடமிருந் து கோரப் பட்டிருக்கவில்லை. |
| (எ) | பொது முயற்சிகளின் 2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி | பொது திறைசேரி செயலாளரிடமிருந்து விசேட அனுமதி பெற்றுக் கொள்ளாமல் சபை தீர்மான இல .5/15/2022-898 இன் பிரகாரம் சபையின் வாகனக் கொள்கையின் கீழ் ஒருவருக்கு ஒரு வாகனம் ஒதுக்குவதற்கு பதிலாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தலைவர் மற்றும் உப தலைவருக்கு இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. | வேண்டுகை அடிப்படை மீது வாகனம் பிரிவுகளிற்கு ஒதுக்கப்பட்டது. அந்த வாகனம் செயலக பிரிவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை வேண்டுகையை பின்பற்ற வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட வாகனங்களிற்கு செய்யப்பட்ட மேலதிக செலவினம் அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பந்தி | பணிப்பாளர் சபை அனுமதி பெற்றுக் கொள்ளமல் சபையானது 2022 சனவரி முதல் 2023 யூலை வரையான காலத்தின் போது மேலதிக பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்போரின் பாவணைக்கு 23,313 லீற்றரை விஞ்சி ரூபா 7.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | மேலும், மேற்குறித்த பயன்படுத்தப்பட்ட மேலதிக எரிபொருள் P 19/2008 19/2008 சபை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவறு உரிய அதிகாரியால் பெறப்பட்டிருந்தது. | முறையான அனுமதி இல்லாமல் சுற்றறிக்கை ஏற்பாடுகள் மீறப்பட்டிருக்கவில் லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபையானது பொது திறைசேரியின் விசேட அனுமதி பெற்றுக் கொள்ளாமல் 1990 ஆம் ஆண்டிலிருந்து 15 கிலோ மீற்றறிற்கு ரூபா 2 வீதத்தில் சலுகை அடிப்படையில் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அலுவலக நேரத்தின் பின்னர் மற்றும் விடுமுறை நாட்களில் மேலதிக பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர் மற்றும் முகாமையாளர்கள் என்போருக்க சபை வாகனங்களை பயன் படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, சபையானது 2022 சனவரியிலிருந்து 2023 யூலை வரை 13 ஊழியர்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக 12,010 லீற்றர் எரிபொருளிற்காக ரூபா 4 மில்லியன் சபையினுடைய நிதிகள் தவறாக பயன் படுத்தியிருந்ததென மாதிரி கணக்காய்வு செவ்வையில் வெளிப்பட்டது. | இதன்படி, 1990.08.01 இல் சபையால் அனுமதிக்கப்பட்ட சுற்றறிக்கை இன்னமும் அமுலாக்கப்படுகின்றன மேலும்,<br><br>2024.02.28 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க PED சுற்றறிக்கையை தொடர்புபடுத்தி GM/OP ஆம் இலக்க 2024.03.08 இல் GM ஆல் வழங்கப்பட்ட சுற்றிக்கை பிரகாரம் மிகை எரிபொருள் எல்லை வரையறுக்கப்பட்டது. | |
| (ஐ) | 2022 சனவரி 14 ஆந் திகதிய 01/2015(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் சுற்றறிக்கைக்கு முரணாகவும் 2021 சனவரியிலிருந்து பொது திறைசேரி செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளாமலும் மாதம் ஒன்றிற்கு 145 லீற்றரிற்கு பதிலாக அசைச்சரின் அனுமதியுடன் வரையறையற்ற எரிபொருள்களை பயன்படுத்தியிருந்தனர்.<br>எவ்வாறாயினும், 01/2015 ஆம் இலக்க PED சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்திக்கு முரணாக. 2022 சனவரி முதல் 2023 யூலை வரையான காலத்தின் போது தலைவரால் மிகையாக பயன்படுத்தப்பட்ட ரூபா 2 மில்லியன் பெறுமதியான 5,806 லீற்றரிற்கும் உப தலைவரால் பயன்படுத்தப்பட்ட ரூபா 2.3 மில்லியன் பெறுமதியான 6,393 லீற்றரிக்கும் அனுமதி | உரிய அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் S/25 ஆம் இலக்கமுடைய 2021.11.25 ஆந் திகதிய கடிதம் ஊடாக உரிய வரிசை அமைச்சு அனுமதித்திருந்தது.<br>உப தலைவருக்கு ஒதுக்கப்பட்ட PK-3575 ஆம் இலக்க வாகனம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சு கடமைகளிற்காக பயபனபடுத்தப்பட்டது. ஆனால், எரிபொருள் செலவினம் எதுவும் சபையால் ஏற்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை வேண்டுகையை இணங்கியொழுக வேண்டியதுடன் உரிய அதிகாரிகளிடமிருந் து மிகை அலுவலக பயனபாட்டிய்காக தேவையான அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், உப தலைவருக்கு ஒதுக்கப்பட்ட PK 3575 ஆம் இலக்க வாகனம் பொது முகாமையாளர் மற்றும் ஆளுகை சபைக்கு அறிவிக்காமல் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வெளித் தரப்பினாரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த காலப்பகுதியில் வாகனம் 13,698 கிலோ மீற்றர் ஓடியிருந்தது. | | |
| (ஒ) | கொள்வனவு வழிகாட்டலின் 8.11.4/5 ஆம் பிரிவு | ரூபா 75 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் செயற்படாமைக்கான காரணங்கள் பற்றி ஒப்பந்தகாரரால் விளக்கப்பட்டோ அல்லது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு Sup & MM/Chem/HL-01/2021/22 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்தகாரரிடமிருந்து எவ்வித எழுத்துமூல அறிவித்தலோ பெறப்பட்டிருக்கவோ இருக்கவில்லை. மேலும், சபையானது ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை தவிர்த்ததினால் ஒப்பந்தத்தை மீறியமை பற்றி உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை | BOC இல் டொலர் திரவத்தன்மை இன்மையால் 2023/05/24 வரை டுஊ திறப்பதில் தாமதம் நிலவியது. எவ்வாறாயினும், அவை 04/11/2023. இல் சொல்லப்பட்ட அளவு (2497.8MT) வழங்கலை பூர்த்தி செய்திருந்தது. . | PED சுற்றறிக்கை வேண்டுகையை இணங்கியொழுக வேண்டும். |
| (ஓ) | 2015 ஆகஸ்ட் 12 இன் Admin/12/2015 ஆம் இலக்க பொது முகாமையாளருடைய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல் | சுற்றறிக்கை பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியல் பெறுமதி ரூபா 50,000 இற்கு மேல் மொத்த பட்டியலுள்ள 4,448 துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பில் நிலுவையாகவிருக்கின்ற ரூபா 695.48 மில்லியன் கூட்டுத் தொகையான கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக 5993 எண்ணிக்கையான வாடிக்கையாளர் கணக்கு சட்ட செயற்பாடுகள் தொடங்குவதற்கு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. இதன்படி, முன்னைய ஆண்டினைவிட முன்னேற்றம் அடைந்திருந்தது. சட்ட செயற்பாடுகளால் அப்பகுதியில் அறவீடு தலைமை அலுவலகத்தின் அறவீட்டுப் பிரிவு ரூபா 617 மில்லியனை | PED சுற்றறிக்கை வேண்டுகையை இணங்கியொழுக வேண்டும். . |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றிருந்தது. இதில் 2023 ஆம் ஆண்டு ரூபா 66 மில்லியனும் 2024 ஏப்ரல் 30 வரை ரூபா 55 மில்லியனும் அறவிடப்பட்டிருந்தது. | |
| ஔ) | 2011 யூன் 06 இன் FD/72 ஆம் இலக்க பொது முகாமையாளருடைய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல் | சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு ஒரு ஆண்டிற்கு முன்னர் வழங்கல் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 1.3 மில்லியன் தொகை வழங்கப்பட்ட முற்பணங்கள் அத்திகதியிலிருந்து 14 நாட்களை விஞ்சியிருந்த பொதிலும் உரிய ஊழியர்களால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சதாரணமாக முற்பணம் வழங்கல் 14 நாட்களிற்குள் அறவிடப்படுகின்றன. இது விசேட வழக்கொன்றாக புலனாய்வு செய்யப்படுகின்றன. புலனாய்வு செயற்பாட்டில் உள்ளமையால் இந்த முற்பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இருக்கின்ற முறைமையுடன் இணங்கியொழுக வேண்டும். . |

**1.9 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடம் ஒன்றிற்கான வருமானம் கடந்த இரண்டு ஆண்டுகளிற்காக ரூபா 30 பில்லியன் தொகை விஞ்சியிருந்த போதிலும் புலனாய்வுக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | எப்பொதும் முதலீட்டு தீர்மானம் ஆலோசனை மற்றும் மேலதிக பொது முகாமையாளர் (நிதி), உதவி பொது முகாமையாளர் (ஒருங்கிணைப்பு நிதி) மற்றும் பிரதம கணக்காளர் (வருமானம் என்பவர்களின் தீர்மானம் என்பவற்றுடன் எடுக்கப்படுகின்றன. ஆவணங்கள் அவர்களில் இரண்டு பேரால் கைச்சாத்திட்ட போதும், முதலீட்டுக் குழுவின் நியமனம் 2024 இல் அமுலாக்கப்படும். | செயற்பாட்டு கைநூலின் வேண்டுகை பின்பற்றப்பட வேண்டும். |

**1.10 வரிப்பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள, விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் - பிரிவு 03 | ஒவ்வொரு வளங்களிலிருந்து மதிப்பிடக் கூடிய வருமானம் புறம்பாக கணப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | முற்கொண்டு வரப்பட்ட வரி விதிப்பு நட்டங்களால் எவ்வித வரிப்பொறுப்பும் இருக்கவில்லை. வரி விதிக்க்கூடிய வருமானம் பூச்சியமாக இருந்தது. | நட்டங்கள் ஏற்பட்ட போதும் வரி விதிக்கக் கூடிய வருமானம் சரியாக கணப்பீடு செய்ய வேண்டும். |
| | - பிரிவு 91 | 2023/2024 வரிமதிப்பீட்டு ஆண்டின் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமான வரி அறிக்கை 2023 | 2023/24 வரிவிதிப்பு ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட வரி கணிப்பீடு பொறுப்பான | வரிப்பொறுப்பு இருக்காத போதும் உரிய திகதியில் அறிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆகஸ்ட் 15 இல் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எழுந்திருக்கவில்லை. இதன்படி EST சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு அதிகாரச் சட்டத்தின் 83(1ஏ) ஆம் பிரிவு மற்றும் 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் (திருத்தம்) மற்றும் 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் (திருத்தம்) மற்றும் 2022 திசெம்பர் 28 ஆந்திகதிய 2312/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தல் | 2023 ஆம் ஆண்டில் APIT வரி மீதான வரி பொறுப்பு ஊழிய வருமானம் கணிப்பீடு செய்யும் போது சபையானது மருத்துவ காப்பீட்டு படி, தொலைபேசி படி, பிரயாணபடி மற்றும் சுற்றுலா விடுதி செலவு என்பவற்றினை கணக்கிற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. | APIT கணப்பீட்டிற்காக வாகனப் படிகள், தொலைபெசிப் படிகள் மற்றும் வதிவிட வசதி என்பன கருத்தில் கொள்வதற்கு ஏற்கனவே படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தது. | தண்டப்பணங்களை தவிர்ப்பதற்கு அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,286.52 மில்லியனான வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிலுள்ள நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 2,699.80 மில்லியனாக (மீளக் குறிப்பிடப்பட்டது) இருந்தது. ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 7,986.33 மில்லியனால் இலாபத்தில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கான நட்டத்துடன் ஒப்பிடும் 74 சதவீதத்தல் வருமானம் மற்றும் 232 சதவீதத்தால் ஏனைய வருமானம் அதிகரித்தல் என்பன நிதிசார் விளைவுகளின் இந்த முன்னேற்றத்திற்காக பிரதான பங்காற்றியிருந்தது. மேலும், கட்டண அதிகரிப்பகளுடன் மீற்றர் விற்பனைகள், மொத்த மற்றும் பவுசர் விற்பனைகள் என்பவற்றிலுள்ள அதிகரித்தலின் ஒப்பீட்டு விளைவாக முன்னைய ஆண்டினை விட 135 சதவீத்தால் மொத்த இலாபம் அதிகரித்திருந்தது. ஏனைய வருமானத்திற்கு பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளிற்காக ரூபா 2.597 மில்லியன் தொகையான மீள்சுழற்சி முற்பணங்களின் மாற்றம் இந்த சாதகமான நிலைக்கு பிரதானமாக பங்காற்றியிருந்தது.பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கு இடையில் ஐந்து (5) சதவீதத்திற்கும் 404 சதவீதத்திற்கும் இடையிலான குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டது. எனவே, பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2 பிரதன வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன.

| விபரங்கள் | முரண் அதிகரிப்பு / (வீழ்ச்சி) (ரூபா. மில்) 2023 | 2022 | முரண் % | முரணுக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| மீட்டர் விற்பனைகள் | 57,536 | 32,533 | 77 | கட்டண வீதங்களில் அதிகரிப்பு வழங்கிய புதிய இணைப்பின் அதிகரிப்பு, உள்நாட்டு நுகர்வு அதிகரிப்பு, பவுசர் வழங்கலில் வழங்கல் அதிகரிப்பு போன்றவை |
| விற்பனைக் கிரயம் | 32,844 | 23,145 | 42 | நீரிறைத்தல் கிரயம், இரசாயண கிரயம், திருத்தம் பராமரிப்பு, வாடகை மற்றும் தாபனச் செலவினம் போன்றவற்றில் அதிகரிப்பு |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் | 4,285 | 1,289 | 232 | தண்டப்பணம் மற்றும் மிகையறவீடு உள்ளடங்க மீள் சுழற்சி வருமானம், நீர் மீட்டல் மற்றும் நிலக்கீழ்நீர் வருமானம், நானாவித வருமானம் பொன்றவற்றில் அதிகரிப்பு |
| நிர்வாகச் செலவினம் | 14,841 | 14,052 | 6 | திருத்தம், பராமரிப்பு, மற்றும் தாபனச் செலவினம், வாடகை, இறைகள், வரிகள், பாதுகாப்பு போன்றவற்றில் அதிகரிப்பு |
| நிதிக் கிரயம் | 14,948 | 3,917 | 282 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் போதான கடன் கைதவிர்ப்புகள் அதிகரிப்பு, ஆண்டின் போதான செலுத்த வேண்டிய தவணைகள் செலுத்தாமை மற்றும் வட்டி வீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரப்பு |

## 2.3. விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்காக சபையின் முக்கியமான விகிதங்களில் சில பின்வருமாறு உள்ளன.

| **ஆண்டு** | **2023** | **2022** மீளக் குறிப்பிடப்பட்டது |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 47 | 35 |
| தேறிய இலாப எல்லை | 9 | (8) |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.55 | 0.67 |
| திரவ விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.44 | 0.57 |

| | | |
|---|---|---|
| மொத்த சொத்து சுழற்சி (தடவைகளின் எண்ணிக்கை) | 0.06 | 0.04 |
| உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் | 0.44 | 0.53 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் திரவ நிலை மீதான பிரதான நிதி விகிதங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது பாதகமான நிலையை காட்டியிருந்தது. இந்த வீழ்ச்சி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது எடுக்கப்பட்ட கடன்கள் மீதான செலுத்த வேண்டிய வட்டி வீதங்கள் மற்றும் செலுத்த வேண்டிய கடன்கள அதிகரித்தல் என்பன பிரதான காரணமாக உள்ளது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது சபையின் மொத்த நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் வெளிநாட்டு கடன் திருப்பிச் செலுத்தல்கள் செய்யப்பட்டமையால் ரூபா 335 பில்லியனிலிருந்து 321 பில்லியன் வரை அல்லது 4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எனவே, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் (இணைப்பு விகிதம்) 0.53 இலிருந்து 0.44 சதவீதம் வரை அல்லது 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2023 செப்தெம்பர் மாதத்திலிருந்து கட்டணங்கள் அதிகரித்தமையால் முன்னைய ஆண்டினைவிட பதினேழு சதவீதத்தல் தேறிய நட்டங்கள் வீழ்ச்சியடைந்தருந்தது. சொத்துக்கள் பயன் படுத்துவதில் வினைத்திறனின்மையை காட்டுவதால் சொத்துக்களின் சுழற்சி மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது சொத்துக்களின் பயன்பாடு 50 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையால் சாதகமான மட்டத்தில் உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| குடிநீரில் உப்புநீர் கலப்பதை தருப்பதற்காக நில்வல உப்புநீர் தடையின் நிர்மாணத்தின் கீழ் புற்தரை இருவதற்காக ரூபா 5 மில்லியனில் பொருத்தப்பட்ட தடைக்கோவை தொழில்நுட்ப நிபுணர்களின் சிபார்சுகள் மற்றும் இந்த நிர்மாண நோக்கத்தை அடைவதற்கு தடைக்கோவை புதுப்பிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்ட நில்வல உப்புநீர் தடையின் அபிவிருத்தியின் தாக்கத்தை லங்கா நீரியல் நிறுவகத்தால் வழங்கப்பட்ட அறிக்கைகள் என்பவற்றினை பெற்றுக் கொள்ளாமல் ரூபா 8 மில்லியன் கிரயதில் விவசாயிகளின் எதிர்ப்பு காரணமாக மாவட்ட செயலாளரின் அறிவுறுத்தலில் அகற்றப்பட்டிருந்தது. மேலும், உப்புநீர் தடை நிர்மாணம் மற்றும் மாத்தறை மாவட்ட சுற்றாடல் தாக்கத்தில் ஏனைய காரணங்களை சுட்டிக்காட்டி சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையின் குழுவால் அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. தடைக்கோவைகள் அகற்றப்பட்ட பின்னர், சபையின் தரப் பரிசோதனை அறிக்கைகள் நீரில் உப்பு கலந்திருந்ததென காட்டியிருந்தது. | 40 அடி நீளமான பீலிகள் தொழில்நுட்ப காரணங்களின் தொளிவான சான்றுகள் இல்லாமல் விவசாயிகளின் எதிர்ப்பு காரணமாக மாத்தறை பிரதேச செயலாளரின் அறிவுறுத்தல் பிரகாரம் அகற்றப்பட்டிருந்தது.<br><br>அதேநேரம் NWSDB அந்த இரும்பு தாள் பீலிகளை அகற்றுவதற்கு தெளிவாக ஆட்சேபனை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், ஏனைய பங்கு உரித்தாளர்கள் NWSDB இன் ஆட்சேபனையை கருத்திற் கொள்ளாமல் இரும்பு தாள்பீலிகளை அகற்றுவதற்கு தீர்மானம் எடுத்திருந்தது.<br><br>இதன்விளைவால், அந்த இரும்பு தாள்பீலிகளை அகற்றல் நீண்ட கால பாதிப்பபை ஏற்படுத்துகின்றன. | ஏற்பட்ட செயற்திட்ட கிரயத்தை வினைத்திறனாக்குவதற்கான நிபுணத்தவர் அபிப்பிராயத்துடன் புற்தரைகளை தாபிக்கப்பட வேண்டும். |

ஆகவே, அகற்றப்பட்ட தடை கோவைகளின் கிரயம் வினைத் திறனற்றதாக இருக்கும்.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபை வாடிக்கையாளர் பட்டயத்தின் பிரகாரம், புதிய இணைப்புகள் திகதியின் 30 நாட்களிற்குள் வாடிக்கையாளருக்கு முதலாவது பட்டியல் வழங்க வேண்டும். எவ்வாறாயினும், 2024 மார்ச் 30 இல் உள்ளவாறு 129 சந்தர்ப்பங்களில் கேட்டை - கொலன்னாவ, கொழும்பு தெற்கு, கவுதார- மொரந்துடுவ மற்றும் மகரகம - கேஸ்வேவ பிராந்தியத்தில் 1 ஆவது பட்டியல் வழங்குகையில் 89 நாட்கள் முதல் 160 நாட்கள் வரையான கருத்திற்கொள்ளக் கூடிய தாமதம் அவதானிக்கப்பட்டது. | அந்த பகுதியில் புதிய நீர் இணைப்புகளின் ஏற்பாடுகளிற்காக சேவை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலைமை ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட தகவல்களை வழங்குவதிலுள்ள தாமதம் காரணமாக எழுந்ததென கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய தாமதங்கள் இல்லாமல் நீர் வழங்கி 30 நாட்களிற்குள் வலைப்பட்டியல் வழங்க முயற்சி எடுக்கின்றதுடன் பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சபையின் வாடிக்கையாளர் தன்மையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்த வேண்டியதுடன் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை தொடர்ச்சியாக ஏற்படுகின்ற தவறுகளை தவிர்ப்பதற்கு வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பழுதடைந்த, பயன்படுத்த முடியாத மற்றும் நகராதவையான முறையே ரூபா 2.6 மில்லியன், ரூபா 173 மில்லியன் மற்றும் ரூபா 552 மில்லியன் கூட்டுத்தொகை 2023 திசெம்பர் 31 வரை கைதவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருந்ததுடன் இருப்பு தேக்கிவைத்த காலப்பகுதியை இனங்காண்பதற்கு சபையால் காலப் பகுப்பாய்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | முந்திய இருப்பு மெய்மையாய்வு இருப்பு முகாமைத்துவ நடைமுறைக் கைநூல் பிரகாரம் அந்த சொத்துக்களில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இருப்பு காலப்பகுப்பாய்வு பரிந்துரைக்கப்பட்ட IMS விருத்திகளின் பின்னர் வழங்கப்படும். | இருப்பு முகாமைத்துவ நடைமுறைக் கைநூலில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் அந்த விடயங்களை தெளிவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையானது மூன்று அண்டுகளிற்கு மேலாக இருந்த ரூபா 30 மில்லியன் தொகையான இருப்பு குறைவை தெளிவாக்குவதற்கு அவசியமான நடவடிககைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இருப்பு குறைவுகள் மீது விரிவான புலனாய்வுகள் கைத்தொழில் தொடர்பு அபிவிருத்திகளால் நடாத்தப்பட்டிருந்தது. | புலனாய்வுகள் தேவையில்லாமல் தாமதப்படுத்தாது இருக்க வேண்டியதுடன் தாமதங்களால் ஏற்பட்ட ஏதாவது நட்டங்கள் பொறுப்புடைய உத்தியோகத்தர்களால் இறுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 ஆம் ஆண்டிற்கான பௌதீக மெய்மையாய்வு அறிக்கை பிரகாரம், சேதமடைந்திருந்த ரூபா 106 மில்லியன் கூட்டுப் பெறுமதியான இறையில் கட்டிடங்கள், கட்டமைப்பு, கணனிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் அளவை உபகரணம், நடமாடும் உபகரணம் போன்றன எட்டு கிரய நிலையங்களிலிருந்து பயன் பாட்டிலிருந்து அகற்றப்பட்டு இடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த விடயங்களை கைதவிர்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்தினை மெய்மையாய்வு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப் பட்டிருந்ததுடன் மெய்மையாய்வு அறிக்கை பிரகாரம் கூடிய விரைவில் அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் மீதி சொத்துக்கள் உரிய அனுமதியுடன் கைதவிர்க்கப்படும். | சுற்றறிக்கை வேண்டுகை பிரகாரம் பயன்படுத்தப்படாத சொத்தக்கள் கைதவிர்க்கப்பட வேண்டும். |
| (உ) | மனிதவள, வழங்கல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையிற்கான அனுமதிக்கப்பட்ட செயற்பாட்டு கைநூல் சபையின் உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்தவதற்காக சபையில் இருக்கவில்லை. மேலும், கணக்காய்வு, செயற்திட்டம், நிலக்கீழ் நீர் கையாளல், கழிவகற்றல், வடிவமைப்பு மற்றும் RSC இன் செயற்பாடுகள், OIC அலுவலகம் மற்றும் முகாமைத்தல அலுவலகம் போன்ற துறைகளிற்காக கிடைத்த செய்றபாட்டு கைநூல் 1989 இலிருந்து நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | HR மற்றும் IR திணைக் களத்திற்காக ISO தர சான்றிதழ் அறிமுகப்படுத்தகின்ற நடைமுறையுடன் சேர்த்து செயற்பாட்டு கைநூல் தயாரிக்கப்படுகின்றன. அனுமதி பெறப்பட்டவுடன் அவை கணக்காய்வு பிரிவுக்கு கையளிக்கப்படுவதுடன் றேுளுனுடீ முறையான உள்ளக கட்டுப்பாட்டை வைத்திருப்பது பொல அவசியமன அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பறுகின்றது. | சபையின் செயற்பாடுகளை சுமூகமாக்குவதற்கு கைநூல் நாளதுவரை யாக்குவதை நிறைவேற்ற வேண்டும். |
| (ஊ) | சுண்ணாம்பு நீரோட்டம், அலுமிய துகள்கள், சுத்தகரிப்பு பவுடர், குளோரின், பொலி அலுமினிய துகள்கள் போன்ற நுகருவதற்காக சபையால் பொருளிருப்பு மட்டங்கள் தாபிக்கப் பட்டிருக்கவில்லை. இருப்பு பகுப்பாய்வு இனங்காணப்படாமை, இனங்காணப்படாத இருப்பு மட்டங்கள் போன்ற MIS முறைமையின் வரையறை நுகரக்கூடிய தேவைகளை மதிப்பிடுகின்ற போது பாதிக்கப்பட்டிருந்தது. ஆகவே, | எதிர்காலத்தில் இந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு தேவையற்ற செலவினை தவிர்ப்பதற்கும் வினைத்திறனாக நிதிகளை முகாமை செய்வதற்கும் பொருளிருப்பு மட்டங்களை உருவாக்க வெண்டும். |

| | | |
|---|---|---|
| சில சந்தர்ப்பங்களில் பொருட் தேவைகள் முறையற்ற தீர்மானம் எடுப்பதனால் மதிப்பிடப்பட்டிருந்தது. . | | |
| (எ) சம்பளத்துடன் நபர் ஒருவருக்கு ரூபா 10,000 படிகளை வழங்கி ழீனு சிகிச்சைக்காக ரூபா 83 மில்லியன் தொகயும் ஏனைய 6 வகையான சகிச்சைக்காக ரூபா 13 மில்லியன் தொகையும் வெளிவாரி காப்புறுதி கொள்கைக்கு ஏற்பட்ட கிரயத்திற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது சபையால் ஏற்பட்டிருந்தது. மேலும், அந்த காப்புறுதி சிகிச்சைகளின் கோரிக்கைக்கான நிபந்தனைகள் 2021 பெப்ரவரி 09 ஆந் திகதிய 4252(இ) ஆம் இலக்க சபை தீர்மானத்தின் வேண்டுகைக்கு முரணாக சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு வெளிவாரி மருத்துவ காப்புறுதி திட்டத்தால் வேப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 118 ஆல் மருத்துவ செலவனங்கள் அதிகரக்கின்றதனால் 2021 ஆம் ஆண்டில் உள்ளக காப்புறுதி திட்டங்களின் கீழ் 8,843 ஊழியர்களிற்காக ஏற்பட்ட ரூபா 119.08 மில்லியன் தொகையுடன் ஒப்பிடும் போது வெளிவாரி திட்டங்களின் கீழ் 2023 ஆம் அண்டில் 8,275 ஊழியர்களிற்காக ரூபா 259.50 மில்லியன் சபைக்கு ஏற்பட்டிருந்தது. | நபர் ஒருவரிற்கான மேலதிக கிரயம் ரூபா 9,100 பெற்ப்பட்ட கேளிவி பிரகாரம் சபையால் இறுகக்கப்பட வேண்டியிருந்தது. ஆகவே, சபை பொருத்தான காப்புறுதி திட்டம் ஏற்படுத்தம் வரை வருடம் ஒன்றிற்கு சம்பளத்துடன் ரூபா 10,000 செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. | சபையானது செலவினங்களை வினைத்திறனாக முகாமை செய்ய வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு கொள்வனவுகளில் இடைப் போக்கிலள்ள இருப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இடைப் போக்கிலுள்ள இருப்புகள் முறையே ரூபா 1,246 மில்லியன் மற்றும் ரூபா 4,827 மில்லியனாக இருந்தது. அந்த இருப்புகளில் ரூபா 642 மில்லியன் தொகையான உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டவை | அந்த கணக்குகள் கடன் பத்திரங்கள் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட இருப்புக்களிற்கு மொத்த கிரயத்தை ஒதுக்கீடு செய்வதற்கு கட்டுப்பாட்டு கணக்குகளாக செயற்டுகின்றன. சாதாரணமாக, ஒரு LC பூர்த்தி செய்ய வேண்டிய சில சரக்குகள் அல்லது தொகுதிகளை கொண்டிருந்தது. LC கட்டுப்பாட்டு கணக்குகளில பூர்த்தியாக்கப்பட்டிருந்த சகல சரக்குகளும் இதுவரை தெளிவாக்க | நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற இடைப்பொக்கிலள்ள மதிகளை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிக்கூற்றக்களில் இடைப்பொக்கிலுள்ள இருப்புக்களை சரியான அனுமதியை |

| | | |
|---|---|---|
| தெளிவாக்கப்படாமல் மூன்று மாதங்களிற்கு மேல் இருந்ததுடன் ரூபா 3,070 மில்லியன் தொகையான இறக்குமதி செய்யப்பட்ட இடைப்பொக்கிலுள்ள இருப்புகள் தெளிவாக்கப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேல் இருந்தது | முடியவில்லை. | உறுதிப்படுத்த வேண்டும். |

### 3.4 நிதிகளின் குறைபயன்படு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கம்பஹா, அதனாகல மற்றும் மினுவாங்கொடை நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக சீனா அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட கடனிற்கான கடன் தள்ளுபடி காலத்தின் பின்னர், ஐ.அ.டொலர் 45 மில்லியன் தொகையான கடன் தவணைப்பணங்கள் மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட்டிருந்தது. சீனா அபிவிருத்தி வங்கியால் கைதவிர்க்கப்பட்ட கடனில் ரூபா 16,836.51 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 52 மில்லியன் தொகை அல்லது 29 சதவீதம் மீளாய்வாண்டு இறுதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தாமல் எஸ்றோ கணக்கிற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நாட்டின் இடைக்கால கடன் கொள்கை காரணமாக 2022 ஏப்ரலிலிருந்து ஒப்பந்தகாரருக்கு IPC கொடுப்பனவுகள் செய்யப் பட்டிருக்கவில்லை. ESCROW கணக்கில் கிடைத்த மிகுதி நிதிகளை கைதவிர்ப்பதற்கு CDB உடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் IMF உடன் அரசாங்கத்தின் கலந்துரையாடல்கள் இறுதி யாக்கப்பட்ட பின்னர் சாதகமான தீர்வு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சந்தர்ப்ப கிரயங்களை குறைப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவெற்ற வேண்டும். |

### 3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 33 மில்லியன் கிரயத்தில் நான்கு நீர் வழங்கல் திட்டங்களால் நிர்மாணிக்கப்பட்ட பதின்மூன்று அலுவலக விடுதிகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | எதிர்காலத்தில் வேண்டப்பட்டவாறு திருத்தங்களின் பின்னர் உத்தியோகத்தர் விடுதிகள் பயன்படுத்தப்படும். | உத்தியோகபூர்வ விடுதிகளை முழுமையாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 5.5 மில்லியன் மற்றும் ரூபா 9 மில்லியன் பெறுமதியான முறையே இங்கிரிய, வதினகல மற்றும் தமன்ன நீர் வழங்கல் திட்டம் தொடர்பிலான சகல நிர்மா2001 ஆண்டிலிரந்து பயனற்றிருந்ததுடன் அந்த சொத்துக்களை பயன் படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவை கைவிடப்பட்டது, ஆனால் அவை எதிர்காலத்தில் பயன்படுத்தவதற்காக புனரமைக்கப்படும். இங்கிரியாகல் சப்மெசிபிள் பம்புகள் மஹாஓயா WSP (MTN 16501). இற்கு கையளிக்கப்பட்டது. பரகஹெகெல WSP இந்கு விநியோக முறைமை இணைக்கப்பட்டிருந்தது. வெவாவிலிருந்து பழைய நீர்த்தேக்க வழி விருப்பமான பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்தவதற்கு ஒழுங்குகள் செய்ய வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வெலைகளிலுள்ள தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பதின்நான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் ஐந்து உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் 02 முதல் 08 சந்தர்ப்பங்கள் வரை கால நீடிப்பு வழங்கிய பின்னரும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல், காணி பெறுவதில் தாமதம், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சனைகள், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், கோவி-19 தொற்று நோய், பொருளாதார சீர்கேடு போன்றன காரணமாக 498 முதல் 2,510 நாட்கள் வீச்சிலான கருத்திகொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்க்பட்டது.<br>செயற்பாட்டிலுள்ள செயற் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் நீர் வழங்கல் செயற்திட்ட பிரிவிலிருந்து பெறப்பட்ட தகவல்களை கருத்திற் கொள்கையில், செயற்திட்ட காலப்பகுதி நீடித்தல்களின் எண்ணிக்கை போன்றன ஒரே செயற்திட்டத்திற்காக நடைமுறை ஆண்டிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களிற்கு இடையில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.<br><br>மேற்குறிப்பிட்ட தவறுகள் காரணமாக, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை மற்றும் அரசாங்கம் எதிர்பாராத விதமாக விலைவேறுபாடாக ரூபா 19,868 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. அதற்கு மேல், செயற்திட்டங்கள் கடப்பாட்டுக் கட்டணங்கள், தாமத கட்டணங்கள் மற்றும் நாணய தளம்பல்கள் மீதான நட்டங்கள் போன்ற சிக்கனமற்ற செலவுகள் ஏற்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்த காலத்திற்குள் விலை தளம்பல் சூத்திரங்கள் பிரயோகிக்கப்படுகின்றதுடன் ஒப்பந்தகாரர் சகல விலை தளம்பல்களையும் பெறுவதற்கு உரிமையை கொண்டுள்ளது. சகல விலத் தளம்பல்களும் உரிய அனுமதி மற்றும் பின்வரும் கொடுப்பனவு நிபந்தனையுடன் செலுத்தப்பட்டிருந்தது.<br>ஒப்பந்தங்கள் அனுமதிக்கும் நேரத்தில் விலைத் தளம்பல்கள் எதுவும் இருக்காத ஒப்பந்தங்கள் 07/02/2023 ஆந் திகதிய CP/23/0042/618/003 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் நிதி அமைச்சால் 25.01.2023 இல் அவருடை தீர்மானம் என்பவற்றின் பிரகாரம் விலை வேறுபாட்டு கொடுப்பனவுகளை கருத்திற் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு நேரடியாக பாதிக்கப்பட்ட ஏதாவது அசாதாரன நிலை இருக்காத பொது ஆரம்ப உடனபடிக்கை பிரகாரம் செயற்திட்ட நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

## 3.7 கொள்வனவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு நீர் வழங்கல் மீட்டர்களை கொள்வனவு செய்வதற்கு நிதிப்பு முகவரின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு செயற்திட்ட நிதிகள் மூலம் கடப்பட்டுக் கட்டணமாக சபை ரூபா 67 மில்லியன் மேலதிகமாக செலுத்தியிருந்தது. ஆகவே, அந்த ஒப்பந்தங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட நீர் மீட்டர்களின் கிரயம் ரூபா 720.98 அல்லது 12.93 சதவீதத்தல் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 44,701 மற்றும் 253,009 ஆன தொகை முறையெ 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு இறுதியில் இருப்பில் இருந்தது. | எரிர்பாராத நீர் வழங்கலை வழங்குவதற்கு நாட்டில் நிலவிய நிலைமை பிரகாரம் உயர் முகாமைத்துவம் ஒப்பந்தகாரர் ஊடாக LC ஐ திறப்பதற்கு தீர்மானம் எடுதிருந்தது. BOC இல் GCWWMIP செயற்திட்டம் டொலர் கணக்கு கோவிட் நோய்தொற்று காலப்பகுதி மற்றும் பொருளாார சிக்கலான கால்ப்பகுதி என்பவற்றின் பின்னர் சொல்லப்பட்ட கேள்விளை வழங்குவதற்கு போதிய டொலர் திரவத் தன்மை இருக்கவில்லை. | நோக்கெல்லைக்கு புறம்பான நடவடிக்கைகளிற்காக நிதியளிப்பு முகவரின் அனுமதி பெறப்பட வேண்டியதுடன் சபை சிக்கனமற்ற செலவினங்களை தவிர்க்க வேண்டும். |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டலின் 7.12 ஆம் பந்தியின் பிரகாரம் வினைத்திறனான போட்டியின்மையால் கேள்வி இரத்து செய்யப்பட்டிருந்த பொதிலும், ஒரே ஒரு கோள்வியாளருக்காக 2019 ஆம் ஆண்டில் ருவான்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முறையே முதலாவது மற்றும் இரண்டாவது கோள்வியாளருக்காக ரூபா 57 மில்லியன் மற்றும் ரூபா 654 மில்லியன் தாமதக் கட்டணங்கள் கோரப்பட்டிருந்ததுடன் கோரப்பட்ட தொகை 2024 மார்ச் 30 வரை கோரப்பட்ட தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், பட்டில் கொடுப்பனவிலுள்ள தாமதம் காரணமாக FIDIC வழிகாட்டலின் 14.7 மற்றும் 14.8 ஆம் பந்திகளின் கீழ் ஐ.அ.டொலர் 127,851 கோரிக்கை செய்திருந்தார் மேலும், கணக்காய்வாளர்களுடைய கணிப்பீட்டின் பிரகாரம், செயற்திட்ட மீள் கட்டமைப்பிற்காக 20.4 கிமீ முதல் 5.9 கிமீ வரை நீளமான பரிமாற்ற வழி குழாயிடலிற்காக நீளம் குறைத்தமை காரணமாக | றுவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டததிற்கான சாத்தியவள அறிக்கை 2012 இல் பூர்த்தியாக்கப்பட்டது. பின்னர் 2030 முதல் 2040 வரை கொறிசோன் வடிவமைப்பை சீராக்க வெண்டியிருந்தது. 2012 இ ற்கும் 2015 இற்கும் இடையில் குறிப்பிடுவதற்கு முக்கியமாக இருந்தது. சாத்தியவள அறிக்கையின் பின்னர் மூன்று ஆண்டுகளில் கொள்வனவு கொள்வனவு நடவடிக்கை தொடங்கப்பட்டமையால்கொறிசென் ரல் வடிவமைப்பை மாற்றுவதற்கு வேண்டியிருக்கவில்லை. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWS&DB) 2015 இல் வடிவமைப்பு நோக்கத்தை மெருகேற்றி இருக்குமாயின் கொள்வனவில் மேலுத் தாமதத்தை விளைவிக்கும். ஆகவே, ஆனது செயற்திட்டம் தொடங்கியதிலிருந்து அவசியமான சீராக்கல்களை செய்திரந்தது. ரூபா 81.98 மில்லியன் தொகையான இந்த முரண் காரணமாக கால நீடிப்பின் கிரயத் தாக்கம் ஒப்பத்தத்திற்குள் முரண் | சிறந்த விலையில் ஒப்பந்தகாரரரை தெரிவு செய்வதற்கு கொள்வனவு நடைமுறை இலக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தால் ரூபா 55 மில்லியன் மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கட்டளை அனுமதி பெற்ற பின்ர் ஒப்பந்த நிகழத்தக்கவைகளால் மேவப்பட்டிருந்தது. | |
| (இ) | 2500 மெற்றிக்தொன் சுண்ணாம்பு கல் கொள்வனவு Sup&MM/chem/HL-01/2021/22 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் கேள்வி ஆவணங்களின் இணைப்பு 12 இன் வேண்டுகை பிரகாரம் முன் தகைமைகளை நிறை வேற்றியிருக்காத ஒப்பந்தகாரருக்கு கொள்வனவு குழுவின் அனுமதியுடன் மதிப்பிடப்பட்ட விலையுடன் ரூபா 49.37 மில்லியன் சாதகமற்ற முரண் கட்டளையுடன் வழங்கப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில் குறைநத கேள்வியாளருக்கு வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தகாரர் பராமீற்றர் முகாமை உள்ளடக்கங்களிற்காக நீடிப்பை கோரியிருந்தது. இதன் விளைவால், ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டதுடன் இருப்பு பற்றாக்குறையை மற்றும் ஒப்பந்தத்திற்கு எடுத்த காலப்பகுதி, LC திறத்தலில் தாமதம், உற்பத்தி மற்றும் கப்பலேற்றுகை காலப்பகுதி மற்றும் விசேட குழுப் பரிந்துரைகள் என்பவற்றால் கருத்திற் கொண்டு DPC ஆல் வழங்குவதற்காக அடுத்த கேள்வியளரை கருத்திற் கொள்ளப்பட்டது. | தீர்மானம் எடுக்கும் போது கிரயம் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தண்ணீர் மீட்டர்கள் கொள்வனவு செய்யும் போது DGM/M&E/WM/15/2021/09 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் பொருாதா சிக்கல் காலதடதழலட கடன் பதிரம் திறப்பதலுள்ள தாமத காலத்தில் ரூபா பெறுமதி தேய்வடைந்ததிற்காக ரூபா 48.97 மில்லியன் தொகை செலுத்தியிருந்தது. மேலும் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரால் செயற்படாமையால் இந்த ஒப்பந்தத்திற்காக ரூபா 83.58 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடும்போது ரூபா 167.39 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. | இடையூறில்லாமல் நீர் வழங்குவதற்காக நாட்டடில் நிலவிய நிலை பிரகாரம் உயர் மட்ட முகாமைத்தவம் ஒப்பந்தகாரர் ஊடாக LC ஐ திறப்பதற்கு தீர்மானம் (இணைப்பு 05) எடுதிருந்தது. BOC இல் GCWWMIP செயற்திட்டம் டொலர் கணக்கு கோவிட் நோய்தொற்று காலப்பகுதி மற்றும் பொருளாார சிக்கலான கால்ப்பகுதி என்பவற்றின் பின்னர் சொல்லப்பட்ட கேள்விளை வழங்குவதற்கு (இணைபு 05) போதிய டொலர் திரவத் தன்மை இருக்கவில்லை. | தீர்மானம் எடுக்கும் போது கிரயம் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். |

**3.8 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டுவ இறைக்கும் நிலையத்திற்காக ரூபா 45.93 மில்லியனில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு இறைக்கும் இல்லம் தொடக்கத்திலிருந்த முறையாக வேலை செய்யவில்லை. சபையானது குறைபாட்டு பொறுப்பு | குறைபாட்டு திருத்தங்களிற்காக ஏற்பட் கெலசுகளை அறவிடுவதற்காக சபை எடுத்த தீர்மானம் தொடர்பில் நட்டங்களிற்காக இழப்பீடாக ஒப்பந்தகாரருக்கு உடமையான பிடிகாசு செலுத்தப்படவில்லை. | பிடிகாசு மற்றும் செயலாற்றல் பிணைமுறி ஊடாக சபையால் ஏற்பட்ட செலவு மற்றும் ஏதாவது குறைபாடுகளை |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியின் போது அந்த குறைகளை திருத்துவதற்கு ஒப்பந்தகாரர் கவனம் செலுத்தி யிருக்காமையால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு சபையினுடைய நிதிகளை பயன்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், குறைபாட்டு காலப்பகுதி 2022 ஏப்ரல் 22 இல் கடந்திருந்த பொதிலும் 19 குறைபாடுகளை திருத்துவதற்காகவும் ஒப்பந்த நிபந்தனைகளை மீறியதற்காகவும் சபையால் ஏற்பட்ட கிரயத்தை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மேவப்பட வெண்டும். |
| (ஆ) | சபையானது பரஸ்பர ஒப்பந்த இடை நிறுத்தலிற்காக அமைச்சரவையிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மீள் கட்டமைப்பு குழு சிபார்சுகள் மற்றும் பாரிய செயற்திட்டங்களின் ஒப்பிடல் என்பவற்றின் பிரகாரம் பிரதம மந்திரியின் செயலாளரால் வழங்கப்பட்ட நெறிபடுத்தல் படி செயற்திட்டத்தை பூர்த்தியாக்காமல் மாத்தறை கட்டம் IV ஐ பரஸ்பரம் நிறுத்தியிருந்தது. 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு மீதி வேலைகளை பூர்தியாக்குவதற்கு தவறிய ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்காததுடன் 2024 மார்ச் 31 வரை பரஸ்பர நிறுத்தலிற்கு உடன்பட்டனர். சபையானது காணச் சுவீகரிப்பு தாமதம் காரணமாக பிரதான சுத்திகரிப்பு பொறியின் தொடங்குவதிலுள்ள தாமதத்தால் ஒப்பந்தகாரிற்காக தாமதக் கட்டணமாக ரூபா 72.7 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 2.1 மில்லியன் செலுத்தியிருந்தது. கொள்வனவு வழிகாட்டலின் 2.3.1(ஆ) இல் வேண்டப்பட்வாறு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சபை கட்டாயப் படுத்தப்பட்டதுடன் தாமதக் கட்டணம் செலுத்துவதில் தாக்கம் இருந்தது. மேலும், எடுக்கப்பட்ட தீர்மானம், முகாமைத்துவ தீர்மானம் எடுப்பதிலுள்ள பிரச்சனைகள் மற்றும் திட்டங்களை பின்பற்றாமை என்பவற்றின் விளைவால் செயற்திட்ட | மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பரஸ்பர இடைநிறுத்தல் அனுமதி பணிப்பாளர் சபைால் வழ்கப்பட்டிருந்தது. காணி உரிமையாளர்கள் NWSDB இற்கு எதராக நீதி மன்னறத்தில் வழக்கு தொடுத்தரந்ததுடன் செயற்திட்டம் கோவிட் 19 நோய் தொற்று மற்றும் நாட்டின் நிதி நெருக்கடி காரணமாக தாமதப் பட்டிருந்ததுடன் அத்தயாவசிய வேலைகளான பராமரிப்பு வேலைகளை இருக்கின்ற உத்தியோகத்தர்களுடன் முடியாதிருந்தது. | தேவயற்ற தாமதங்கள் மங்ளும் சபைக்கான செலவினை தவிர்ப்பதற்கு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட முன்னர் காணிகளின் தெளிவாக்கல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தாமதங்களில் வித்தியாசமான நாணயமாற்று வீதங்களால் ரூபா 1,715 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முகாமைததுவ சேவைகள் திணைக்கத்திடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்ட ஒப்பந்தத்தை நிறுத்திய பின்னர் ஒப்பந்த ஊழியர்களிற்காக ஒரு வருட காலமாக ரூபா 30 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | கண்டி வடக்கு – பாததும்பர நீர் வழங்கல் செயற்திட்த்திற்கான கால நீடிப்ப 2023 மே 28 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கல் நிதியளிப்பு காலப்பகுதி முடிவடைந்த பொதிலும் கொடையாளரால் வழங்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 88 சதவமுதமாக உள்ளதுடன் நிலுவையாக இருக்கின்ற ஒப்பந்த வேலைகளின் பெறுமதி ரூபா 12 பில்லியனாக இருந்தது. இறைக்கும் இல்லங்கள் மற்றும் 25 நீர் தொட்டிகள் ரூபா 102 மில்லியன் இணைத்தல் கட்டணம் செலுததப்படாமையால் மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருக்காமை காரணமாக செயற்படுத்த இயலாதிருந்தது. ஐ.அ.டொலர் 8,840,917 இல் கொள்வனவு செய்யப்பட்ட 16 பம்புகள் மற்றும் 6 மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்ப்டிருக்கவில்லை. 15 மொத்த மீட்டர்ள் மற்றும் 132 வால்புகள் என்பன செயற்திட்டத்தால் பொருத்தவதற்கு திட்டமிடப் பட்டிருந்தது. 15 மொத்த மீட்டர்கள் மாத்திரமே பொருத்தபபட்டிருந்தது. | ஒப்பந்தகாரருக்கு கொடுபனவு செய்யாமையால் முக்கியமான வேலைகளின் பூர்த்தியாக்கல் தாமதப்பட்டமையால் மின்பிறப்பாக்கி மற்றும் பம்புகள் இரண்டிற்குமான பரீட்சிப்பு நடாத்த இயலதாருந்தது. குறிப்பிடப்பட்ட வால்புகள் நிதிப் பிரச்சனைகளிற்கு முகம் கொடுத்து செயற்திட்டத்திற்கு இறக்குமதி செய்து வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நோக்கங்கள அடைவதற்கு செயற்திட்டத்தை பூர்த்தியாக்க நிதிகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | அளுத்கம, மத்துக்கம மற்றும் அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் 2020 மே 14 ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து 08 கால நீடிப்பகள் வரையும் 95.34 சதவீதமான பௌதீக முன்னேற்றத்தை மாத்திரம் அடைந்திருந்தது. உயர்ந்த அழுததம் மற்றும் பொருததுதலட தவறுகளால் செயற்பாடற்ற நிலையில் இருந்ததை ஒப்பந்தகாரர் பொருத்திய இரண்டு புதிய பம்புகளால் பழைய நீர்தேக்கத்தின் செயற்பாடு | பல்வேறு தவர்க்க முடியாத காரணங்களால் ஒப்பந்தகாரருக்கு 08 நீடிப்பகள் வழங்கப்பட்டிருந்தது. தற்போது, ஒப்பந்தகாரர் அழுத்தத்தற்காக காரணங்களை ஆய்வு செய்துள்ளதுடன் உடனடியான படிமுறைகளை எடுக்கின்றது. | ஒப்பந்த குறைபாடு காரணமாக ஏற்பட்ட தேவையற்ற செலவினக் கோரிக்கை மற்றும் குறைபாட்டு காலப்பகுதியின் பொது ஒப்பந்தகாரரிடமிருந்து குறைபாடுகளை திருத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தப்பட்டது. புதிய பம்புகளின் தவறுகளால் சபையானது சுத்திகரிக்பு பொறியிலிருந்து 15.5 கிமீ இற்கு அப்பால் அமைந்திருந்த கொலமோதர புதிய நீர்தேக்க்திலிருந்து கெத்தகேன சுத்திகரிப்பு பொறி வரை நீரை இறைத்திரந்தது. இதனால் சபையானது பழைய நீர்தேக்கம் செயற்பாடாத காலத்தின் பொது ரூபா 106 மில்லியன் மேலதிக மின்சார கிரயத்தை ஏற்றிருந்தது. | | |
| (உ) | சபையானது வழங்கப்பட் DI குழாய்கனிள் தரத்தை பரிசோதிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவால் தெரிந்த தரப் பரிசோதனை அறிக்கையில் கொடுப்பனவு செய்திருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் 08 ஆம் பொது நிபந்தனைக்கு எதிராக ரூபா 19 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கையின் விநியோகிக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், பௌதீக பரிசோதனையில் இருந்த 95 DI குழாய்களில் 10 DI குழாய்கள் பொருத்தலில் நீர் கசிவு காரணதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்ட தரம் கொண்டிருக்கவில்லை என கணக்காய்வு மாதிரிச் செவ்வையில் வெளிப்பட்டது. | வழங்கப்பட்ட பொருட்களின் தரப் பரிசொதனை சம்பந்தப்பட்ட நீர் சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது. உரிய குழாய்கள் பரிசோதிக்கப்படும். அத்துடன் இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டவாறு தரப்பரிசோதனை இருக்கவில்லை. | பொருட்கள் பெறப்பட்டு வழங்கும் நேரத்தில் காணப்படுகின்ற தரப் பரிசோதனையை விட தரத்தினை சோதிப்பதற்கு நடைமுறையை விருத்தி செய்ய வெண்டும். |
| (ஊ) | கொள்வனவுக் குழு சகல செயற்திட்டங்களிற்குமாக நீரின் தொடக்கத்தில் நிதிகளின் கிடைப்பனவை உறுதிப் படுத்தியிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்ட தகவல் முறைமையால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 475 திட்டமிட்ட நடவடிக்கைகளில் 106 நடவடிக்கைகளில் 6 அல்லது 6 சதவீதத்திற்கு குறைந்த முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்திருந்தது. மேலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டங்களிற்காக இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 5,198.89 மில்லியன் பெறுமதியுடைய HDPE குழாய்கள் முறையற்ற முகாமைத்துவம் காரணமாக நாடுபூராவும் இருப்புக்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தது. | உடன்படுகின்றோம். | கொள்வனவுக் குழு நிதிகளை பயன்படுத்துவதற்கு முன்னர் செயற்திட்டங்களின் சாத்தியவளத்தை உறுதிப்படுத்த வேண்டும். |

### 3.9 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது 2015 இலிருந்து வரிசை அமைச்சிற்கு முறையற்ற வழியில் விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர்களிற்காக மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 24.34 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 263.33 மில்லியன் வரிசை அமைச்சிடமிருந்து மீளளிக்க வேண்டியிருந்தது. 2020 இலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை சனாதிபதி அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக சம்பளங்களாக செலுத்தப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகை அறவீடு செய்யப்படாமல் இருந்தது. மேலும், ஒரு ஊழியருக்கு 2022 யூலை 22 இலிருந்து சம்பளத்தை செலுத்தாமல் பிரதம மந்திரி அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்நார் | வரிசை அமைச்சிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகை பிரகாரம் ஊழியர்கள் விடுவிக்கப் பட்டிருந்தனர் ஒவ்வொரு மாதமும் விடுவிக்கபபட்ட ஊழியர்களிற்கு செலுத்தப்படுகின்ற சம்பயங்களை மீளளிப்பதற்கு வரிசை அமைச்சிற்கு வேண்டுகைகள் அனுப்பப்படுகின்றன.<br>வரிசை அமைச்சு NWS&DB இற்கு மீளளிக்கப்பட்டிருக்காத இந்த தொகை படிப்படியாக விடுவிக்கப்படும் என்பதை அமைச்சு அறிவித்திருந்தது. சில ஊழியர்கள் திரும்பவும் NWS&DB இற்கு ஒதுக்கப்பட்டிருந்தனர். | செயற்பாட்டு கைநூலின் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |
| ரூபா 66.47 மில்லியன் பெறுமதியுடைய ஆறு வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 39.26 மில்லியன் பெறுமதியுடைய ஒரு வாகனம் செயற்திட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் 2019 இல் இறக்குமதி செய்யப்பட்டதிலிருந்து வரிசை அமைச்சின் ஒருங்கமைப்பு செயலாளரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு அந்த வாகனங்களை திரும்ப பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | |

### 3.10 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2,625 ஊழியர் பற்றாக்குறை நிலவியதுடன் 104 ஊழியர்கள் மிகையாக இருந்ததுடன் மொத்தமாக 21 பதவிகளில் வெற்றிடமாக உள்ளன. எவ்வாறாயனும் சபையானது சபைக்கு தேவப்பட்ட மளனித சக்தியை ஏற்படுத்தவதற்கு தேவையான பதவியணியை மீளாய்வு செய்திருக்கவில்லை. | தற்போதைய தேவைகள் மற்றும் அவசியமான உத்தியொகத்தரை அதிகரிப்பதற்கும் பொருத்தமான உத்தியோகத்தர் திட்டத்தை நாளது வரையாக்குவதற்கு முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கோரப்பட்டிருந்தது. ஆனால், அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், தற்போது ஊழியர்களிற்கான தேவை இருந்த பொதிலும் அரசாங்கம் ஆட்சேர்த்தலை நிறுத்தி இருந்தமையால் ஆட்சேர்த்தலை மேற்கொள்வதற்கு சாத்தயமற்றிருந்தது. | சபைக்கு பொதிய உத்தியொகத்தர்களை சேர்ப்பதற்கு அல்லது பதவியணில் தேவையை முறையாக மதிப்பாய்வின் பின்னர் சபையின் அனுமதித்த பதவியணியை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையானது 2016 மார்ச் 24 ஆந் தகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.7 மற்றும் 07 ஆம் பந்தி மற்றும் அதன திருததங்களிற்கு முரணாக முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமல் 2023 சனவரி மாதத்திலிருந்து மாத்தறை கட்டம் IV செயற்திட்டத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட பதினொரு ஊழியரிற்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்ட சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | சபையானது O&M நடவடிக்கைகளிற்காக செயற்திட்ட உத்தியோகத்தர்களை பயன்படுத்தியிருந்தது. 11 செயற்திட்ட உத்தியோகத்தர்கள் பிராந்திய ஆதார நிலையங்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்தனர். அத்தியாவசிய வேலைகளாக இருந்த அந்த செயற்பாடு மற்றும் பராமரிப்பு வேலைகள் இருக்கின்ற உத்தியோகத்தருடன் மேற்கொள்ள முடியாதிருந்தது. | செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னர் அனுமதி பெறப்பட வேண்டும். |
| (இ) | சபையானது மாதிரி கணக்காய்வு செவ்வையின் போது, மேல் தெற்கு பிராந்தியத்தின் 591 ஊழியர்களில் 273 ஊழியர்கள் வேண்டப்பட்ட 05 ஆண்டுகளிற்கு முரணாக ஒரே இடத்தில் 07 ஆண்டுகள் மற்றும் 38 ஆண்டுகளிற்கு இடையில் வேலை செய்கின்றனர். மேலும், மனிதவளப் பிரிவு தீர்மானம் எடுக்கின்ற நோக்கங்களிற்காக உரிய பிரிவுகளிற்கு இமாற்றப்பட்ட திகதி, பதவியுயர்வு திகதி போன்றன ஒவ்வொரு ஊழியர்களிற்காகவுமான தரவு அடிப்படை பேணியிருக்கவில்லை. . | கருத்தில் கொள்ளப்படும் தொழிலாளர் அணி கட்டாய இடமாற்றங்களிற்காக விண்ணப்பங்களை கோரப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சியை விரைவல் அமுலாக்குவதற்கு பட்டியல் உள்ளது. | ஊழியரின் நன்மைக்கான ஊழியரின் இடமாற்றத்திற்கு உடனடியாக தரவு அடிப்படையை விருத்தி செய்ய வேண்டும். |
| (ஈ) | புலனாய்வு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையால் 2022 சனவரி முதல் 2023 ஆகஸ்ட் வரை ஊழியர்களால் புலனாய்வு பிரிவக்கு வழங்கப்பட்ட 144 முறைப்பாடுகளில் 49 முறைப்பாடுகள் மாத்திரமே தீர்த்து வைக்கப்பட்டது. | 10 புலனாய்வு உத்தியோகத்தர்கள் சபையின் அனுமதயுடன் ஒப்பந்த அடிப்படையில் 2023.09.15 இல் நியமிக்கப்பட்டிருந்தனர் இதன்படி, 2022 சனவரி முதல் 2023 ஆகஸ்ட் வரை இதுவரை பெறப்பட்ட முறைப்பாடுகளில் 137 முறைப்பாடுகள் உத்தரவு அடிப்படையில் தொடர்புபடுத்தப்பட்டது. அவற்றில் 102 தற்போது பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்கு இடையில் தைரியத்தை விருத்தி செய்தற்கு நீர்த்து வைத்தல் நடைமுறையை நிறைவேற்ற வேண்டும். |

### 3.11 வாகன அணியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையால் கைதவிர்க்கப்பட்ட 196 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் சபையின் பெயரின் கீழ் இன்னமும் பதியப்பட்டிருக்காததுடன் பதிவசெய்யப்பட்ட 23 வாகனங்கள் | வாகனங்களின் விபரங்களை வழங்குவதற்கு மாற்றுவோர் மற்றும் பிராந்திய ஆதார நிலையங்களின் விபரங்களுடன் உரிமையாண்மையை மாற்றவதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கடிதம் | தேவையற்ற கடமை மற்றும் மொசடிகளை தவிர்ப்பதற்கு இந்த விடயங்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| அடையாளம் காணமுடியாதிருந்தது. | அனுப்பப்பட்டது. | வேண்டும். |

**4. கணக்களிப்பு நல்லாளுகையும்**

**4.1 கணக்களிப்பு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 1974 இன் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சட்டத்தின் 05(04) ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு இந்த ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அக்கறையுடையொரை தலைவர் வெளிப்படுத்தியிருக்காத போதிலும் ரூபா 73 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் சூரிய சக்தி முறைமையின் கொள்வனவிற்றாக சபை தலைவருடன் நேரடியாக தொடர்புபட்டிருந்த கம்பனிக்கு ஒப்பந்தம் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் கொள்வனவு குழு தலைவராக சபையின் தலைவர் தலைமை தாங்கியிருந்தார். | தேசிய கொள்வனவு வழிகாட்டல் பிரகாரம் போட்டிக் கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. | சபையுடன் ஏதாவது நெரடியாக அல்லது மறைமுகமாக அக்கறையுடையவரை வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**4.1.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கை திட்டமும்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2020 – 2025 இற்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் "சகலருக்குமான நீர்" கருத்துடன் இணைந்து ஆண்டிற்கான புதிய இணைப்பகளின் இலக்ககள் தாபிக்கப்பட்டதுடன் இறுதியாக இலக்கு ஆண்டின் போது 160,000 இற்கு திருத்தப்பட்டது. எவ்வாறாயினும், 115,509 ஆன புதிய இணைப்புகள் வழங்கப்பட்டது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது புதிய இணைப்பகளின் எண்ணிக்கை 24.61 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த பொதிலும் மீட்டர் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது 77 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2023 செப்தெம்பர் 01 இல் கட்டணங்களின் அதிகரிப்பு விற்பனை வளர்ச்சிக்கு பிரதான காரணமாகும். 2023 ஆம் ஆண்டிற்காக வருமானமற்ற நீரிற்காக தாபிக்கப்பட்ட 23.91 சதவீதவீதத்தற்கு எதிராக 25.32 சதவீதம் அடைந்திரந்ததுடன் தெற்கு மற்றும் மத்திய பிராந்திய ஆதார நிலையங்களின் வருமான மற்ற நீர் சதவீதம் மீளாயவாண்டின் போது 30 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது. | 2023 ஆம் ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட இணைப்புகள் ஒப்பந்தம் வழங்கிய பின்னர் விலை வேறுபாடு மற்றும் பொருளாதார சிக்கல் காரணமாக அராங்க கொள்வனவு செயலிழந்தமை என்பன காரணமாக அடைய முடியாதிருந்தது. 2015 இலிருந்து 2022 வரை எங்களுடைய புதிய இலக்குகள் இணைப்பு வளர்ச்சியை கண்டது என நாங்கள் குறிப்பிடுகின்றோம் ஆண்டு ஒன்றிற்கான இணைப்புகள் சராசரியாக 136,000 ஆக இருந்தது. சவால்கள் இருப்பினும், எங்களுடைய செயலாற்றல் 2023 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட 115,000 உடன் திடமாக இருந்தது. எங்களுடை தரிக்கப்பட்ட வளர்ச்சி முறையிலிருந்து குறிப்பிடத் தக்களவு விலகல்கள் இல்லாமல் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில். தடையற்ற விரிவர்கலிற்கு எங்களுடைய பங்களிப்பு தொடர்ச்சியாக அடிகோலிட்டிருந்தது. | அமைப்புகளை சரியான வழியில் நெறிப்படுத்தவதற்கு அடையவேண்டிய இலக்குகள் உருவாக்கப்பட வேண்டும். |

## 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி சபையால் வழங்கப்பட்ட பொது முயற்சிகளின் தலைவர் மற்றும் பணிப்பாளர்களிற்கான நல்லாளுகைக்கான கைநூலின் 4.4.1 ஆம் பந்தியின் வேண்டுகை பிரகாரம் சுதந்திரமாக செயற்பட வேண்டிய போதிலும் 2023 ஒக்தேபர் மாதத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சபையின் முன்னாள் பொது முகாமையாளர் ஆளுகைச் சபையின் உறுப்பினராகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் பொது ஓய்வூதிய நலன்கள் ரூபா 6.25 மில்லியனாக இருந்தது. | இந்த உறுப்பினர் கணக்காய்வு குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். | பணிப்பாளர் சபையின் சுதந்திரத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையின் இல. 06 நிலைபேறான அபிவிருத்தி இலக்குடன் (SDG) 2025 அளவில் குழாய் பொருத்திய மேவுகையை 100 சதவீதம் அடைவதற்கு கூட்டிழைந்த திட்டத்தை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. சபை இந்த இலக்குகளை அடைவதை நோக்கி 08 இலக்குகள் மற்றும் 08 குறிகாட்டிகள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இலக்கில் சபையானது அதிகாரமளிக்கின்ற நீர் துறையில் சட்டக் கட்டமைப்பு இலக்கின் 100 சதவீதம் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மீளாய்வாண்டின் பொது வீட்டுடமைளானர் மற்றும் வீட்டுடமையற்றோர் குழாய் மேவுகை 313,217 ஆல் அதிகரிப்பதற்கும் குழாய்வழி கழிவகற்றல் மேவுகை 867 ஆல் அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டதுடன் எவ்வாறாயினும், 60 சதவீதமான நீர் துறையின் அதிகாரமளிக்கின்ற சட்டக் கட்டமைப்பு 187,339 நீர் இணைப்புகள் மற்றும் 338 கழிவகற்றல் இணைப்புகள் மாத்திரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது. | 2020-2025 இற்கான கூட்டிணைந்த திட்டம் ஆரம்பத்தில் ‘‘சகலருக்குமான நீர்’’ நிகழ்ச்சித் திட்டத்தை கட்டியொழுப்பவதற்கு நாட்டில் நிலவிய பொருளாதார சிக்கல் காரணமாக இடையூறுகளிற்கு முகம் கொடுத்தது. பின்னர், WFA நிகழ்ச்சித்திட்டதின் நோக்கு தடைபட்டிருந்ததுடன் 2025 அளவில் இயலளவு மற்றும் தரத்தை உயர்த்துவதற்கு இருக்கின்ற நீர் வழங்கல் திட்டத்தில் இயலளவை உயர்த்துதல் மற்றும் செயற்திட்டங்களின் விநியோக விரிவாக்கம் (CEDE) என்பவற்றின் நோக்கி அமர்ந்திருந்தது. | உடன்பட்ட நொக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |